01.12.15

# தினமலர்

### இன்றைய வேளாண் செய்திகள்

## 4.16 லட்சம் டன் உரம் கொள்முதல்



சேலம்:விவசாய பணிகளுக்காக, நவம்பர் மாதத்தில் மட்டும், 4.16 லட்சம் டன் உரம், ஆந்திரா, ம.பி., உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து, தமிழகம் கொள்முதல் செய்துள்ளது. தற்போது பெய்து வரும் வடகிழக்கு பருவ மழையால், நடப்பாண்டில், 98 சதவீத நீர்நிலைகள் நிரம்ப வாய்ப்புள்ளது. நடப்பாண்டில், விளைநிலங்களின் பரப்பு, 55.02 லட்சம் ஹெக்டேராக அதிகரிக்கும் என, வேளாண்மை அதிகாரிகள் கணித்துள்ளனர்.நடப்பாண்டில், உரத்தின் தேவை, 23.60 லட்சம் மெட்ரிக் டன் முதல், 30 லட்சம் மெட்ரிக் டன் என கணக்கிடப்பட்டுள்ளது. ஆந்திரா, ம.பி., ஆகிய மாநிலங்களில் இருந்து, யூரியா, டி.ஏ.பி., - பொட்டாஷ், காம்ப்ளக்ஸ் ஆகிய உரம் வரவழைக்கப்பட்டுள்ளது.நவம்பரில் மட்டும், தமிழகத்தில் உள்ள, 16 ரயில்வே கூட்ஸ் ஷெட்டுக்களுக்கு, 4.16 லட்சம் மெட்ரிக் டன் உரம் வந்துள்ளது. வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியாரிடம், 25 லட்சம் மெட்ரிக் டன் உரம் இருப்பு உள்ளது. மேலும், 10 லட்சம் மெட்ரிக் டன் உரங்களுக்கு,

ஆந்திரா மாநிலத்துக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டுள்ளதால், டிசம்பரில் வந்து சேரும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

## இயற்கை பேரிடரை விலங்குகளால் முன்கூட்டியே உணர முடியுமா?



விலங்குகள், பறவைகளால் கன மழை, பெரும் வெள்ளம், பூகம்பம், புயல் போன்ற இயற்கைப் பேரிடர்களை முன்கூட்டியே உணர முடியுமா? அறிவியல் உலகில் 'முடியாது' என்பவர்களும் இருக்கிறார்கள். 'முடியும்' என்பவர்களும் இருக்கிறார்கள். விலங்குகளுக்கு புலன்கள் கூர்மையானவை, மனிதர்களைவிட சில நிமிடங்கள் முன்கூட்டியே பேரிடர்களை உணர முடியும். அவற்றால் நன்கு நீந்தவும், ஒடவும் முடியும். இதனால்தான் அவை இயற்கை பேரிடர்களிலிருந்து தப்பிக்கின்றன' என்கிறார் அமெரிக்காவிலுள்ள ஜார்ஜியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சுற்றுச் சூழல் விஞ்ஞானியான விட் கிப்பன்ஸ். ஆனால், 'நேச்சர்' என்ற அறிவியல் இதழில் வெளியான ஆய்வுக் கட்டுரை ஒன்று ஆச்சரியமான தகவலை சொல்கிறது. அடிக்கடி பூகம்பம் ஏற்படும் பகுதிகளில், பூகம்பம் நிகழ்வதற்கு முந்தைய சில நாட்களில், உள்ளூர் நாளிதழ்களில், வளர்ப்பு பிராணிகள் காணாமல் போவது பற்றிய விளம்பரங்கள் அதிகரிப்பதாக அந்தக் கட்டுரை குறிப்பிடுகிறது. சரி எந்தெந்த விலங்கினங்கள் இயற்கை சீற்றங்களை முன்கூட்டியே உணர முடிவதாக சொல்லப்படுகிறது?

**தேனீ**

மழை பெய்வதற்கு சில மணி நேரங்கள் முன்பாகவே தேனீக்கள் தங்கள் மெழுகுக் கூடுகளுக்கு திரும்பிவிடுகின்றன. தேனீர்களால் காற்றிலுள்ள

ஈரப்பதம், மேகங்களில் ஏற்படும் அயனி மின் மாற்றங்களை துல்லியமாக உணர முடிவதுதான் இதற்கு காரணம்.

**எலி, பாம்பு**

பூமிக்கடியில் வங்குகளில் வாழும் எலி, பாம்பு போன்றவை பூகம்பத்தை பல மணி நேரம் முன்பே உணர்ந்து, பாதுகாப்புக்கா வெளியேறி விடுகின்றன. பூமிக்கு மேலே வசிக்கும் மனிதர்கள் உணர்வதற்கு முன்பே, பூமிக்கு அடியில் வசிக்கும் இந்த விலங்கினங்களால் மெல்லிய அதிர்வுகள் வலுவடைவதற்கு முன்பே உணர முடிகிறது.

**பூனை**

ஜப்பானில் பூகம்பத்திற்கு முன்பு வீட்டில் வளர்க்கும் பூனை வினோதமாக சத்தமிட்டு, உருண்டு புரண்டு தன் அச்சத்தை தெரிவித்ததாக அதன் உரிமையாளர்கள் சொல்வதுண்டு. பூனைக்கு சிறு சப்தத்தையும், அதிர்வையும் உணரும் திறன் உண்டு.

**நாய்**

பல்லாயிரம் மனித உயிர்களை பறித்த 2004 சுனாமிக்குப் பிறகு, நாய்கள் போன்ற விலங்குகளின் சடலங்கள் மிகக் குறைவாகவே தென்பட்டதை நிவாரண பணியில் ஈடுபட்டவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். நாய்கள் தங்களை சுற்றிலும் நடக்கும் மாற்றங்களை கனிக்கக்கூடியவை. இரவு நேரம் சுனாமி வருகையில், குரைப்பதன் மூலம் பிற நாய்களுக்கும் தகவல் தெரிவித்து, பாதுகாப்பான பகுதிகளுக்கு அவை ஓடிச் சென்றிருக்கலாம்.

**எறும்பு**

மண்ணில் வாழும் எறும்புகளால் காற்று மண்டலத்திலுள்ள மின் மாற்றங்களையும், புவி காந்தப் புலத்தில் ஏற்படும் சிறு சிறு மாற்றங்களையும் நுட்பமாக உணர முடியும். எனவேதான் பூகம்பம், மழை போன்றவை ஏற்படுவதற்கு முன்பே உணர்ந்து பாதுகாப்பான இடங்களுக்கு சாரிசாரியாக வெளியேறுகின்றன. சில நாடுகளில் விவசாயிகள் எறும்புகளின் நடவடிக்கையை வைத்து மழையை கணிப்பது வழக்கம்.

**மாடு**

ஜப்பானில் பெரும் பூகம்பங்கள் ஏற்படுவதற்கு 6 நாட்களுக்கு முன்பிருந்தே கறவை மாடுகள் பால் சுரப்பது கணிசமாக குறைந்து விடுவதை விவசாயிகளும், பால் பண்ணையாளர்களும் கவனித்திருக்கிறார்கள். பேரிடர் வருவதை உணர்ந்து மிரண்டு போய்த்தான் அவை இப்படி நடந்துகொள்கின்றன என்கிறார்கள் அவர்கள்.

### அரசு துவரம் பருப்பு179 டன் விற்பனை

கூட்டுறவு, அமுதம் அங்காடிகளில், 179 டன், குறைந்த விலை துவரம் பருப்பு விற்பனையாகி உள்ளது. அக்டோபரில், 1 கிலோ துவரம் பருப்பு, 200 ரூபாயை தாண்டி விற்பனையானது. இதைஅடுத்து, மத்திய அரசு வெளிநாடுகளில் இருந்து, அதிகளவில் இறக்குமதி செய்தது. தமிழகத்திற்கு, 500 டன் முழு பருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த பருப்பு, 71 கூட்டுறவு அங்காடி, 20 அமுதம் அங்காடி என, 91 கடைகளில் கிலோ, 110 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நவ., 1ல் விற்பனை துவங்கியது; நேற்று வரை, 179 டன், அதாவது, 1.79 லட்சம் கிலோ பருப்பு விற்பனையாகி உள்ளது. அரசு பருப்பு விற்பனை துவக்கியவுடன், வெளிச்சந்தையில் விலை குறைந்தது. அரசு கடைகளில், முதல் வாரத்தில், தினமும் சராசரியாக, 20 ஆயிரம் கிலோ பருப்பு விற்பனையானது; தற்போது, 17 ஆயிரம் கிலோ விற்கிறது.

# 5 நாள்!

- தமிழகம் முழுவதும் தொடர்ந்து கொட்டப்போகுது கனமழை
- குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தீவிரமடைவது காரணம்



சென்னை: 'வங்கக் கடலில் உருவாகியுள்ள, புதிய காற்று அழுத்த தாழ்வு நிலை, தீவிரமடைந்து வருகிறது. இதனால், தமிழகம் மற்றும் புதுச்சேரியில், அடுத்த ஐந்து நாட்களுக்கு கனமழை பெய்யும்' என, வானிலை ஆய்வு மையம் எச்சரித்து உள்ளது.

**இதுகுறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன், நேற்று கூறியதாவது:** இரு நாட்களுக்கு முன், அந்தமான் கடலில் உருவான காற்று அழுத்த தாழ்வு நிலை, எதிர்பார்த்த அளவு வலுவடைந்து, தமிழகத்தை நோக்கி நகரவில்லை; மறைந்து விட்டது. தற்போது, வங்கக் கடலின் தென்மேற்கு பகுதியில், இலங்கை அருகே, புதிய காற்று அழுத்த தாழ்வு உருவாகி உள்ளது. இது, தென்மேற்காக மேலும் நகர்ந்து, தமிழகம் அருகே நிலை கொண்டுள்ளது. இதனால், தமிழகம் மற்றும் புதுச்சேரியில், அடுத்த நான்கு நாட்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மழை எச்சரிக்கை: டிச., 1, 2, - தமிழக வட மாவட்டங்கள், புதுச்சேரியின் அனேக இடங்களில் மிக கனமழை; தென் மாவட்டங்களில், ஒருசில இடங்களில் கனமழை. டிச., 3, 4 - தமிழகம், புதுச்சேரியில் பரவலாக கனமழை.சென்னையில், அடுத்த 48 மணி நேரத்துக்கு, வானம் மேக மூட்டத்துடன் காணப்படும்; மழை அல்லது இடியுடன் கூடிய மழை, விட்டு விட்டு பெய்யும்.நேற்று காலை, 8:30 மணி

வரை, தமிழகத்தில் அதிகபட்சமாக, தஞ்சை மாவட்டம், குடவாசல் - 12; விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் - 10; சிவகங்கை மாவட்டம், திருபுவனம் - 9 செ.மீ., மழை பதிவாகி உள்ளது.

**அதிகம்:**

நேற்றுடன் முடிந்த ஒரு வாரத்தில், இயல்பு அளவாக தமிழகத்தில், 3.6 செ.மீ., மழை பெய்ய வேண்டும். ஆனால், 9.1 செ.மீ., மழை பெய்துள்ளது. இதே கால கட்டத்தில், சென்னையில், 8.2 செ.மீ., மழை பெய்ய வேண்டும். ஆனால், 21.7 செ.மீ., மழை பெய்துள்ளது. இதேபோல், 30 மாவட்டங்களில் இயல்பு அளவை விட, கூடுதலாக மழை பெய்துள்ளது. ஈரோடு, கரூர் மாவட்டங்களில், இயல்பு அளவு மழை பதிவாகி உள்ளது. திருப்பூர் மாவட்டத்தில் மட்டும், இயல்பு அளவை விட, குறைவாக மழை பெய்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

**மாவட்ட நிர்வாகங்கள் 'உஷார்':**

தமிழகத்தில், ஐந்து நாட்களுக்கு கனமழை பெய்தால், அதை சமாளிக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கும்படி, கலெக்டர்கள் உட்பட, அனைத்து துறை அதிகாரிகளுக்கும், அரசு அறிவுறுத்தி உள்ளது.* ஏற்கனவே பெய்த தொடர் மழையால், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், தூத்துக்குடி மாவட்டங்கள், பெரும் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளன* கனமழை தொடரும் என்பதால், அனைத்து துறை அதிகாரிகளும், ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்* தண்ணீர் தேங்கும் பகுதிகளில், உடனடியாக தண்ணீரை வெளியேற்ற வேண்டும்* நீர்நிலைகளை, 24 மணி நேரமும் கண்காணிக்க வேண்டும்*நீர் கசிவை நிறுத்த, மணல் மூட்டைகளை தயார் செய்து வைத்திருக்க வேண்டும்* நிவாரண முகாம் மற்றும் மருத்துவ குழுக்களை, 24 மணி நேரமும் செயல்படும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும்.இவ்வாறு அனைத்து துறை அதிகாரிகளுக்கும், அரசு அறிவுறுத்தி உள்ளது.

**மிகக் குறைந்த விலையில், சூரிய ஒளி மின்சாரத்தை தயாரிக்கும் முயற்சியில் இந்தியா: பிரதமர் மோடி தகவல்**

பாரிஸ்: சூரிய ஒளி அதிகமாக கிடைக்கக் கூடிய நாடுகளை ஒருங்கிணைத்து, மிகக் குறைந்த விலையில், சூரிய ஒளி மின்சாரத்தை தயாரிக்கும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளது என பிரதமர் நரேந்திர மோடிகூறினார். உலகம் முழுவதும், வாகனங்களின் பயன்பாடு அதிகரிப்பு, தொழிற்சாலைகள் எண்ணிக்கை அதிகரிப்பு போன்றவற்றால், வளி மண்டலத்தில், கார்பன் டை ஆக்சைடு அதிகரித்து, புவி வெப்பமயமாக மாறி வருகிறது. இதனால், பருவம் தவறிய மழை, வெள்ளம், புயல், வறட்சி போன்ற இயற்கை பேரிடர்கள் அதிகம் நிகழ்ந்து, பெரும் பாதிப்பு ஏற்படுகிறது.

## 150 நாடுகள்:




இதையடுத்து, கார்பன் டை ஆக்சைடை கட்டுப்படுத்தவும், பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பிரான்ஸ் தலைநகர் பாரிசில், உலக நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் மாநாடு, நேற்று துவங்கியது. பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க அதிபர் ஒபாமா, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், பிரான்ஸ் அதிபர் ஹாலண்டே, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் உள்ளிட்ட, 150 நாடுகளின் தலைவர்கள் இதில் பங்கேற்றுஉள்ளனர். இந்த மாநாடு, இம்மாதம், 11 வரை நடக்கிறது. இதில், பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பிரச்னைகளை தடுப்பது குறித்தும், கார்பன் டை ஆக்சைடு வெளியிடுவதை அனைத்து நாடுகளும் குறைப்பது குறித்தும், முக்கிய முடிவு

எடுக்கப்படும் என, தெரிகிறது. இந்த விஷயத்தில், அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளுக்கும், இந்தியா போன்ற வளரும் நாடுகளுக்கும் இடையே, 20 ஆண்டுகளாக கருத்து வேறுபாடு நிலவுகிறது.

### ஏற்க மறுப்பு:

'புவி வெப்பமயமாவதை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளின் பெரும் பங்கையும், சுமைகளையும், வளர்ச்சி அடைந்த நாடுகள் ஏற்க வேண்டும்' என, இந்தியா போன்ற நாடுகள் வலியுறுத்தி வருகின்றன; இதை, வளரும் நாடுகள் ஏற்க மறுக்கின்றன. இந்நிலையில், பாரிசில் நடக்கும் இந்த மாநாட்டில், 20 ஆண்டுகளாக நிலவும் இந்த பிரச்னைக்கு சுமுக தீர்வு ஏற்படும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

### மோடி பாய்ச்சல்:

**பருவநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில், அமைக்கப்பட்டுள்ள இந்திய அரங்கை திறந்து வைத்து, பிரதமர் மோடி பேசியதாவது:**பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பேராபத்தை தடுப்பதில், வளர்ந்த நாடுகளுக்கு முக்கிய பங்கு உள்ளது. இயற்கை வளங்களை அதிகமாக பயன் படுத்திய, வளர்ந்த நாடுகள், அதனால் ஏற்படும் பாதிப்புகளை சுமப்பதற்கு அதிகம் பங்களிக்க வேண்டும்; அதற்கான கடமை, அந்த நாடுகளுக்கு உள்ளது. 'தற்போது, அறிவியல் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. மாற்று எரிபொருட்கள் அதிகம் கிடைக்கின்றன. எனவே, பிரச்னையை தீர்ப்பதில், அனைத்து நாடுகளுக்கும் சமமான பொறுப்பு உள்ளது' என, வளர்ந்த நாடுகள் கூறுவது சரியானதல்ல. அனைத்து நாடுகளும் இந்த விஷயத்தில் இணைந்து, விரைவாகச் செயல்பட வேண்டும். பருவநிலை மாற்றத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை, இந்தியா, நன்கு உணர்ந்துள்ளது. சூரிய ஒளி அதிகமாக கிடைக்கக் கூடிய நாடுகளை ஒருங்கிணைத்து, மிகக் குறைந்த விலையில், சூரிய ஒளி மின்சாரத்தை தயாரிக்கும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

**நவாஸ் ஷெரீபுடன் சந்திப்பு:**

பருவநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் பங்கேற்க, பாரிஸ் சென்றுள்ள பிரதமர் மோடி, அங்கு வந்திருந்த பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீபை சந்தித்தார். அப்போது, இருவரும் கை குலுக்கி, நலம் விசாரித்தனர். சிறிது நேரம், பொதுவான விஷயங்கள் குறித்து பேசினர். இந்தியா - பாக்., நாடுகளுக்கு இடையே நடக்கவிருந்த, தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் மட்டத்திலான பேச்சு ரத்து செய்யப்பட்ட பின், இரு நாட்டு தலைவர்களின் சந்திப்பு, தற்போது தான், முதல் முறையாக நடந்துள்ளது.

**முட்டுக்கட்டை ஏன்?**

1 அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வளர்ந்த நாடுகள், தங்களின் தொழில் வளர்ச்சிக்காக, இயற்கை வளங்களை அழித்து, புவி வெப்பமயமாவதற்கு முக்கிய காரணமாக விளங்குகின்றன. 2 'புவியின் வெப்பம் மேலும் அதிகரித்தால், கடல் நீர் மட்டம் அதிகரித்து, மிகப் பெரிய ஆபத்து உருவாகும்' என, அறிவியல் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். 3 'இதை தடுக்கும் வகையில், தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கு முந்தைய காலங்களில் இருந்ததை, விட, 2 டிகிரி செல்சியஸ் குறைவான வெப்ப நிலையை வைத்துக் கொள்ள, அனைத்து நாடுகளும் ஒத்துழைக்க வேண்டும்' என்பதே, இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ள முக்கிய அம்சம். 4'வளரும் நாடுகளை விட, வளர்ந்த நாடுகள், இதற்கான சுமைகளை அதிகம் தாங்கிக் கொள்ள வேண்டும்' என, வளரும் நாடுகள் வலியுறுத்துகின்றன.

**இரினாடிகொமிரோவா@IrinaGreenVoice**

கடல் வளம், கடவுள் நமக்கு கொடுத்த கொடை. அதை இழந்து விட்டால், அனைத்து விஷயங்களையும் இழந்து விடுவோம்.

**சூசன்ரைஸ்@AmbassadorRice**

பருவநிலை மாற்றம், உலக பாதுகாப்புக்கு விடுக்கப்பட்டுள்ள சவால்; இதற்கு தீர்வு காணாவிட்டால், பல்வேறு பேராபத்துகளை எதிர்கொள்ள நேரிடும்.

**லாங் பாங்ஸ்@LangBanks**

பருவநிலை மாற்ற சவால்களை எதிர்கொள்வதில், ஏழை - பணக்கார நாடு

என்ற பேச்சுக்கே இடமில்லை என்கிறார் ஒபாமா; இதை எப்படி ஏற்க முடியும்?

**மொஹித் யாதவ்@mohitfreedom**

இயற்கை வளங்களை வேட்டையாடிய பணக்கார நாடுகளே, இந்த பிரச்னைக்கு முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

**நெற்பயிரில் செவட்டை நோய் தாக்குதல்:வேதனையில் விவசாயிகள்**

முள்ளிப்பள்ளம்;சோழவந்தான் பகுதியில் பெய்த தொடர் மழையால் அறுவடைக்கு தயாராகயிருந்த நெற்பயிர்கள் செவட்டை நோய் தாக்கி கருகிவிட்டன.சோழவந்தான் அருகேவுள்ள பேட்டை, வடகரை கண்மாய், முள்ளிப்பள்ளம், காடுபட்டி, தென்கரையில் வைகை மற்றும் கண்மாய் நீர்ப்பாசனம் மூலம் 2 ஆயிரம் ஏக்கர் பயன்பெறுகின்றன. இப்பகுதியில் கர்நாடக கட்டா பொன்னி, ஆடுதுறை 45, அக் ஷயா, எல்.எல்.ஆர்., போன்ற குறுகிய கால ரக நெற்பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன.இப்பகுதியில் 50 ஏக்கர் நிலங்களில் பயிரிட்ட நெற் பயிர்கள் சில வாரங்களில் அறுவடைக்கு தயாராக இருந்தன. இந்நிலையில் சில நாட்களாக பெய்த தொடர் மழையால் நெற் பயிரில் செவட்டைநோய் தாக்கியுள்ளது. இதில் பயிர்கள் கருகி, முளைத்த நெல்மணிகளும் சருகாகி விட்டன.முள்ளிப்பள்ளம் விவசாயி கூத்தாயி, "ஒரு ஏக்கரில் நெல் பயிரிட ரூ.18 ஆயிரம் செலவானது. 2.50 ஏக்கரில் நெல் பயிரிட்டேன். இப்பயிரில் செவட்டைநோய், இலைச்சுருட்டு புழு தாக்கி பயிர் கருகி சேதமாயின. இதுகுறித்து அரசு துறையினருக்கு தெரிவித்தும், எந்த நடவடிக்கையும் இல்லை. பாதிக்கப்பட்ட விவசாயிகளை கணக்கெடுத்து அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்," என்றார்.

**அறுவடை செய்ய முடியாமல் தவிப்பு விவசாயிகளுக்கு பல லட்சம் நஷ்டம்**

அலங்காநல்லூர்:அலங்காநல்லூர் பகுதியில் தொடர் மழையால் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தில் விளைந்த நெற்கதிர்களை அறுவடை செய்ய முடியாததால் முளைத்து வருகிறது. அலங்காநல்லூர் பகுதிகளில் பெரியாறு பாசனம் மூலம் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் நெல் விவசாயம் செய்தனர். அறுவடைக்கு 15 நாட்கள் உள்ள நெற்பயிர்களை தொடர் மழையால் இயந்திரம் மூலம் சில விவசாயிகள் அறுவடை செய்து வருகின்றனர். தாழ்வான பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தில் விளைந்த

நெற்பயிர்கள் சாய்ந்து அறுவடை செய்ய முடியாத நிலையில் உள்ளது. விளைந்த கதிர்களை கூலி ஆட்கள் மூலமாகவும், இயந்திரம் மூலமாகவும் அறுவடை செய்ய முடியாததால் நிலத்திலேயே முளைத்து வருகிறது. இதனால் நெல் விவசாயிகளுக்கு பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. உரிய நிவாரணம் வழங்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.மணியஞ்சி விவசாயி பாண்டுரங்கன்: அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த நெற்பயிர்கள் தொடர்மழையால் நிலத்திலேயே முளைத்து வருகிறது. இக்கதிர்களை இயந்திரம் மூலம் அறுவடை செய்ய முடியாது. விளைந்த கதிர்களை அப்படியே விட்டுவிட மனமில்லை. கூலி ஆட்கள் மூலம் அறுவடை செய்து பலன் எடுக்க முடிவு செய்துள்ளேன். இதனால் இரண்டு மடங்கு கூடுதல் செலவாகும். ரூ.5 லட்சம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது. விவசாய பயிர்கள் பாதிப்புக்கென இன்சூரன்ஸ் செய்யப்பட்டுள்ளது. நிவாரணம் வழங்க அரசு உத்தரவு இல்லை, என்றார்.

## வாடிப்பட்டி, டி.கல்லுப்பட்டியில் நெற்பயிரில் இலை கருகல் நோய்

வாடிப்பட்டி:வாடிப்பட்டி, பேரையூர் பகுதிகளில், தொடர் மழையால் நெல்பயிரில் பாக்டீரியல் இலைகருகல் நோய் பரவலாக தென்படுகிறது. விவசாயிகள் இந்நோயை 'செவட்டை' என்று கூறுகின்றனர்.இந்நோயை கட்டுப்படுத்த செப்டோமைசன் சல்பேட் ஏக்கருக்கு 120 கிராம் மருந்துடன் காப்பர் ஆக்சிகுளோரைடு மருந்து 200 கிராமினை சேர்த்து 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைதெளிப்பான் மூலம் 10 நாட்கள் இடைவெளியில் 3 முறை தெளிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு வேளாண் அலுவலர்களை அணுகலாம் என வேளாண் உதவி இயக்குநர் ராமநாதன் தெரிவித்தார்.பேரையூர்: இத்தாலுகாவில் டி.கல்லுப்பட்டி வட்டாரத்தில் நெல் பயிர்களில் இலைசுருட்டு புழு தாக்கியுள்ளது. மழை காரணமாக பயிரில் பூச்சி மருந்து தெளிக்க முடியாமல் நிலை ஏற்பட்டுள்ளது.

## பொள்ளாச்சி சுற்றுப்பகுதிகளில் பாசிப்பயறு சாகுபடி பரப்பளவு குறைந்தது

பொள்ளாச்சி: உணவுக்கும், சருமத்தை காப்பதற்கும் பயன்படும் பாசிப்பயறு சாகுபடி பரப்பளவு குறைந்து வருகிறது. வறட்சியான, மானாவாரி நிலங்களில் வளரக்கூடியது பாசிப்பயறு, இது பச்சைப் பயறு அல்லது சிறுபயறு எனவும் அழைக்கப்படுகிறது. இந்தியா, சீனா, கிழக்காசிய நாடுகளில், 90 சதவீதம் சாகுபடியாகிறது. மழையை நம்பிய மண்ணில் தனிப்பயிராகவும், ஊடு பயிராகவும் இதன் சாகுபடி உள்ளது. இதில், புரதச்சத்து, மாவுப்பொருள், குறைந்த அளவு கொழுப்புச்சத்தும் கொண்டுள்ளது.

விவசாயிகள் அதிகபட்சமாக, அரை ஏக்கர் பரப்பளவில் தான் இதை பயிரிட்டு வருகின்றனர். உணவாக மட்டுமன்றி, மருத்துவத்துக்கும் அதிகமாக பயன்படுகிறது. முளைகட்டிய பாசிப்பயறு உடற்குறைப்பு சமச்சீர் உணவாக பயன்படுத்தப்படுகிறது. கொழுக்கட்டை, மோதகம், பொங்கல், பாயசம், கஞ்சி ஆகியன தயாரிக்க பாசிப்பயறு பயன்படுகிறது. தமிழர் திருநாளான பொங்கல் நாளன்று, சர்க்கரை பொங்கல் தயாரிக்கும்போது, அரிசி, வெல்லத்துடன் பாசி பயறும் சேர்க்கப்படுகிறது. துவரம்பருப்புக்கு பதிலாக சில நேரங்களில் பாசிப்பருப்பு சாம்பார் தயாரிக்கப்படுகிறது. அரிசியும், சிறு பயறும் சேர்த்து கஞ்சியாக சமைக்கப்படுகிறது. இதுதவிர, முகத்தில் உள்ள அழுக்கை முற்றிலும் அகற்றி, முகத்தை பொலிவுடன் வைத்திருக்க இதன் மாவு பயன்படு கிறது. குளியல் சோப்புக்கு மாற்றாக இதை பெரும்பாலானோர் பயன்படுத்துகின்றனர்.பச்சைப்பயறுவில் கோ 4, கோ 6, விபிஎன்1, பிஓய் 1 ஆகிய ரகங்கள் புரட்டாசி பட்டத்தில் விதைக்கப்படுகிறது.

இத்தானியத்தில் பாஸ்பாரிக் அமிலம் அதிகளவில் உள்ளது. பருப்பு தவிர எஞ்சிய பாகங்கள் பசுந்தாள் உரமாகவும், கால்நடை தீவனமாகவும் பயன்படுகிறது. மானாவாரியில் எக்டருக்கு, 600 - 750 கிலோவும், இறவையில் 1,000 - 1,200 கிலோவும் மகசூல் கிடைக்கிறது. பொள்ளாச்சி, கிணத்துக்கடவு பகுதியில், தற்போது இதன் சாகுபடி பரப்பளவு, 40 - 50 எக்டராக குறைந்துள்ளது. நடப்பு ஆண்டில் பாசிப்பயறு மட்டுமல்லாது, பயறுவகைகளின் சாகுபடி பரப்பளவு அதிகரிக்கும் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**குறைவுக்கு காரணம் என்ன?**

பாசிப்பயறு விதைப்பு பொள்ளாச்சி வடக்கு, கிணத்துக்கடவு, மதுக்கரை பகுதியில் குறைவாகவே நடக்கிறது. இதற்கு காரணம் சீதோஷ்ண நிலை தான். இப்பகுதியில் தட்டைப்பயறு சாகு படிக்கு ஏற்ற காலநிலை நிலவுவதால் அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக, தட்டைப்பயறு விளைச்சலில் மகசூல் அதிகமாக கிடைப்பதே இதற்கு காரணமாகும். மற்றபடி பாசிப்பயரில் மகசூலும் குறைவு தான் என விவசாயிகள் நம்புவதே, இப்பயறு விளைச்சல்பரப்பு குறைவாக உள்ளது. கோவை மாவட்டத்தில் அன்னூர், காரமடை பகுதிகளில் பாசிப்பயறு சாகுபடி அதிகம் என, பொள்ளாச்சி வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**அமராவதி அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு! 55 ஆயிரம் ஏக்கர் நிலம் பயன்பெறும்**

உடுமலை: உடுமலை அமராவதி அணையிலிருந்து புதிய மற்றும் பழைய ஆயக்கட்டு பாசன நிலங்களுக்கு, நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால், திருப்பூர், கரூர் மாவட்டத்திற்குட்பட்ட, 55 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். உடுமலை அமராவதி அணைக்கு, வடகிழக்கு பருவமழை சீசன் துவங்கியதும், நீர் வரத்து அதிகரித்தது. பாசனத்திற்கு அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படாததால், நீர் மட்டம், வேகமாக உயர்ந்து, அணை நிரம்பும் நிலையை நோக்கி சென்றது. இந்நிலையில், சம்பா பருவ நெல் சாகுபடி மற்றும் கரும்பு சாகுபடி பணிகளுக்காக, அணையிலிருந்து தண்ணீர் திறக்க வேண்டும் என ஆயக்கட்டு விவசாயிகள் கடந்த இரு வாரங்களாக தொடர் கோரிக்கை விடுத்து வந்தனர். இதையடுத்து, அரசு உத்தரவு அடிப்படையில், நேற்று அணையிலிருந்து பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசன நிலங்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு கீழ் மட்ட ஷட்டர் வழியாக, வினாடிக்கு, 400 கன அடியாக ஆற்றிலும், புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கு, பிரதான கால்வாயில், வினாடிக்கு, 350 கன அடி தண்ணீரும் திறந்து விடப்பட்டது. உடுமலை, மடத்துக்குளம், தாராபுரம், கரூர், அரவக்குறிச்சி தாலுகா பகுதிகளில் அமைந்துள்ள பழைய ஆயக்கட்டு பாசன நிலங்களுக்கு, 10 நாட்கள் தண்ணீர் திறப்பு, 5 நாட்கள் அடைப்பு என்ற

முறையில், மூன்று நனைப்புகளுக்கு, 2,592 மில்லியன் கன அடி தண்ணீர் வழங்கப்பட உள்ளது. புதிய ஆயக்கட்டிலுள்ள, 25,250 ஏக்கர் நிலங்களுக்கு, 7 நாட்கள் திறப்பு; 5 நாட்கள் அடைப்பு என்ற அடிப்படையில், மூன்று நனைப்புகளுக்கு, 978.33 மில்லியன் கன அடி தண்ணீர் வழங்கப்படும்.

நேற்றைய காலை நிலவரப்படி, அணையின் நீர் மட்டம், 90 அடியில், 88.27 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு, 724 கன அடியாக இருந்தது. அணைப்பகுதியில், 9 மி.மீ., மழையளவு பதிவாகியிருந்தது.

தண்ணீர் திறப்பு நிகழ்ச்சியில், கலெக்டர் கோவிந்தராஜ் தலைமை வகித்தார். மடத்துக்குளம் எம்.எல்.ஏ., சண்முகவேலு பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கும், எம்.எல்.ஏ.,க்கள், நடராஜன் (காங்கேயம்), ராமலிங்கம்(ஈரோடு மேற்கு), பொன்னுசாமி (தாராபுரம்), புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கும் தண்ணீர் திறந்து விட்டனர்.

**உருவாகும் மக்கும் குப்பையை உரமாக்க.சோதனை முயற்சி! சுகாதார பணியிலும் இறங்கியது, ஸ்ரீபுரம்**

திருப்பூர்: மக்கும் குப்பையை உருவாகும் இடத்திலேயே சிதைத்து, உரமாக மாற்றும் திட்டத்தை துவக்க, திருப்பூர் ஸ்ரீபுரம் அறக்கட்டளை முடிவு செய்துள்ளது; இதற்கான சோதனை முயற்சி நடந்து வருகிறது.

ஆடை உற்பத்தியில் மட்டுமின்றி, நகர பாதுகாப்பு, இயற்கை வளம், சுகாதாரத்திலும் திருப்பூர் தொழில் துறையினர் சமீபகாலமாக ஆர்வம் காட்டி வருகின்றனர். மாநகர பகுதிகளில் தேங்கும் குப்பையை அகற்றுவது மாநகராட்சிக்கு மிகப்பெரிய சவாலாக உள்ளது. மக்கும், மக்காத குப்பை கலப்பதால், தரம்பிரிக்க முடிவதில்லை. கொசு உற்பத்தி, சுகாதார பாதிப்புகளால், சேகரமாகும் குப்பையை பாறைக்குழிகளில் கொட்டுவதற்கும் மக்கள் மத்தியில் எதிர்ப்பு கிளம்பி வருகிறது. பெரும்பாலான பகுதிகளில், குப்பை அள்ளப்படாமலும், ரோட்டில் சிதறிக்கிடப்பதாலும், குடியிருப்பு

பகுதிகளில் துர்நாற்றம் வீசுகிறது. சமூக சேவைக்காக தொழில் துறையினர், சமூக ஆர்வலர்களை ஒருங்கிணைத்து

உருவாக்கப்பட்ட ஸ்ரீபுரம் அறக்கட்டளை, நகர தூய்மை, மக்களின் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு, மக்கும் குப்பையை உரமாக்கும் திட்டத்தை செயல்படுத்த உள்ளது.நிறுவனங்களில் சேகரமாகும் மக்கும் குப்பையை சிதைக்கும் முறைக்கான வெள்ளோட்டம், செரீப் காலனியில் உள்ள தனியார் நிலத்தில், நடந்து வருகிறது. பெங்களூருவை சேர்ந்த நிறுவனத்திடம், கழிவுகளை சிதைக்கும் பாக்டீரியாக்கள் வாங்கப்பட்டுள்ளன. உரக்குழி அமைத்து, 25 கிலோ கோழி கழிவு, மீன் கழிவு கொட்டி, பாக்டீரியா துகள் தூவப்பட்டு, மாற்றங்கள் கண்காணிக்கப்படுகின்றன.

வீட்டுக்கழிவை வீட்டிலேயே உரமாக்க, பிரத்யேக பிளாஸ்டிக் டப்பா வாங்கப்பட்டுள்ளது. கழிவுகள் மீது, பாக்டீரியா துகள்களை அடுத்தடுத்த அடுக்குகளாக கொட்டி, உரம் தயாரிக்கப்படுகிறது. இச்சோதனை, அறக்கட்டளை நிறுவனர் ராமநாதன் வீட்டில், மேற்கொள்ளப் படுகிறது. மக்கும் குப்பை, இரண்டு மாதங்களில், செடி, கொடிகள் வளர்ச்சிக்கு ஊட்டச்சத்து அளிக்கும் உரமாக மாறும் என, எதிர்பார்க்கப்படுகிறது. சோதனை முடிந்து, நிறை குறை கண்டறியப்பட்டதும், ஆடை உற்பத்தி நிறுவனங்கள், வீடுகள்தோறும் இம்முறையை கொண்டு செல்ல முடிவு செய்யப்பட்டுள்ளது.

ராமநாதன் கூறுகையில், ""வீடுகளில் இருந்து, 70 சதவீதம் மக்கும் குப்பைகளே வெளியேறுகின்றன. கொசு உற்பத்தி, சுகாதாரக்கேடுகளுக்கு, மக்கும் குப்பைகளே காரணம். அவற்றை தரம்பிரித்து பெறுவது சவாலாக உள்ளது. நகர தூய்மையை உறுதி செய்வதற்காகவே, உரம் தயாரிக்கும் திட்டத்தை செயல்படுத்த உள்ளோம். ""பெங்களூருவில், இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுகிறது. இவ்வழிமுறையில், கழிவுகளை வீட்டில் வைத்திருப்பதால், எவ்வித துர்நாற்றமும்; சுகாதாரக்கேடும் ஏற்படாது. இரண்டு மாதத்தில், தரமான உரமாக மாறும். மக்கும் குப்பை வெளியேறுவதை குறைத்தாலே, மாநகரம் தூய்மையாகி விடும்," என்றார்.

## செய்யூரில் 52.5 மி.மீ., மழை

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் மாவட்டத்தில், நேற்று காலை நிலவரப்படி, அதிகபட்சமாக செய்யூரில், 52.5 மி.மீட்டரும், குறைந்தபட்சமாக, ஸ்ரீபெரும்புதுாரில், 10.3 மி.மீட்டரும் மழை பதிவாகி உள்ளது.

## 3,128 பேருக்கு நிலவேம்பு கஷாயம்

செங்கல்பட்டு:செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லுாரி மருத்துவமனையில், 3,128 பேருக்கு, நிலவேம்பு கஷாயம் வழங்கப்பட்டது.செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லுாரி மருத்துவ மனையில், சித்த மருத்துவ பிரிவு சார்பில், நிலவேம்பு கஷாயம் வழங்கும் சிறப்பு முகாம், கடந்த 25ம் தேதி, துவங்கி 29ம் தேதி வரை நடந்தது. இந்த முகாமில், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் தண்டரை மனோகரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர், முகாமில், 3,128 பேருக்கு நிலவேம்பு கஷாயம் வழங்கப்பட்டது.மேலும், மருத்துவமனை யின் சித்த மருத்துவ பிரிவில், தினமும் நிலவேம்பு கஷாயம் வழங்கப்படும் என, மருத்துவர் புனிதா தெரிவித்தார்.

## மதுராந்தகம் ஏரியிலிருந்து உபரிநீர் வெளியேற்றம்

செங்கல்பட்டு:மதுராந்தகம் ஏரியிலிருந்து, வினாடிக்கு 2,600 கன அடி உபரிநீர் வெளியேற்றம் செய்யப்படுகிறது என, பொதுப்பணி துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.மதுராந்தகம் ஏரியின் மொத்த கொள்ளளவு, 609 மில்லியன் கனஅடி; ஆழம் 21:3 அடி; கரையின் நீளம் 12,900 அடி; ஐந்து மதகுகள் உள்ளன. உயரம் 24:3 அடி. தற்போது 23.3 அடி தண்ணீர் உள்ளது.திருவண்ணமாலை மாவட்டம், கிளியாறு, நெல்வாய் மடுவிலிருந்து ஏரிக்கு நீர்வரத்து கூடியுள்ளது. இதனால், கடந்த 23ம் தேதி ஏரியிலிருந்து வினாடிக்கு, 18 ஆயிரம் கனஅடி நீரும், 24ம் தேதி 20,400 அடிநீரும், 25ம் தேதி 17,600 கன அடி நீரும், 26ம் தேதி 10 ஆயிரம் கனஅடி நீரும், 27ம் தேதி 5,000 கன அடி நீரும், 28ம் தேதி 1,250 கனஅடி நீர் ஏரியிலிருந்து வெளியேற்றம் செய்யப்பட்து.கடந்த 29ம் தேதி, நீரின் வரத்து குறைந்ததால், ஏரியிலிருந்து

வெளியேற்றம் நிறுத்தப்பட்டது. நேற்று, கிளியாறு, நெல்வாய் மடுவிலிருந்து, வினாடிக்கு 2,600 கனஅடி நீர் வருவதால், அதே அளவு நீர் கலங்கல் வழியாக வெளியேற்றப்படுவதால், பொதுமக்கள் ஏரியை பார்வையிடவும், அலைபேசியில் புகைப்படம் எடுக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், உயிர் சேதங்களை தவிர்க்க போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர் என, பொதுப்பணி துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## 15 ஆயிரம்கால்நடைகளுக்கு சிகிச்சை

திருத்தணி:கால்நடை துறையினர் நடத்திய, 21 சிறப்பு மருத்துவ முகாம்களில், 15 ஆயகரம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்துள்ளனர்.சில நாட்களாக பெய்து வரும் கன மழையால், கால்நடைகளுக்கு தொற்று நோய் பரவாமல் தடுக்க, மாவட்ட ஆட்சியர் வீரராகவ ராவ் சிறப்பு முகாம் நடத்த, கால்நடை துறைக்கு உத்தரவிட்டார். அதையடுத்து, திருத்தணி கோட்டத்தில், 21 இடங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. அதில், 15 ஆயிரம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு, தடுப்பு ஊசி போடப்பட்டது. அதில், 21 மருத்துவர்கள், 21 ஆய்வாளர்கள் மற்றும் 42 உதவியாளர்கள் கலந்து கொண்டு, கால்நடைகளுக்கு சிகிச்சைகள் அளித்தனர்.

## 32,810 ஏக்கர் நெற்பயிர்கள் மூழ்கிசேதம்:பெருத்த நஷ்டத்தில் விவசாயிகள்

கனமழையால், மாவட்டம் முழுவதும், 32,800 ஏக்கர் நெற்பயிர்களும், 1,500 ஏக்கர் கரும்பு தோட்டங்களும் நீரில் மூழ்கி சேதமடைந்துள்ளன. இதனால், விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டு உள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில், 1 லட்சம் ஏக்கரில், நெற்பயிரும்; 50 ஆயிரம் ஏக்கரில் கரும்பும்; 50 ஆயிரம் ஏக்கரில் பூ, காய்கறிகளும் பயிர் செய்யப்பட்டிருந்தன.

இந்நிலையில், கடந்த, 9ம் தேதி முதல் 23ம் தேதி வரை பெய்த கனமழையால், 32 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. திருவள்ளூர் ஒன்றியத்தில், 1,000 ஏக்கர் நெற்பயிரும்; 10 ஏக்கர் கரும்பு தோட்டமும் நீரில் மூழ்கின.

பயிர்கள் நாசம்:கடம்பத்துார் ஒன்றியத்தில், 5,122 ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கி நாசமாயின. அதில், அதிகபட்சமாக மப்பேடு பகுதியில், 660 ஏக்கர் நெற்பயிர்கள் நாசமாகின. திருத்தணி தாலுகாவில், 1,500 ஏக்கரில் நெற்பயிரும்; 50 ஏக்கர் பூ; 200 ஏக்கர் கரும்பு பயிரும்; 100 ஏக்கர் வேர்க்கடலையும் நீரில் மூழ்கின.

மீஞ்சூர் ஒன்றியத்தில், 26,000 ஏக்கர் பரப்பளவில், சம்பா சாகுபடிக்கு நெல் பயிரிடப்பட்டிருந்தது.

ஆரணி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால், பொன்னேரி, தத்தமஞ்சி ஆற்றின் கரை உடைந்து மழைநீர் வெளியேறி, வஞ்சிவாக்கம், ஆண்டார்மடம், போலாச்சியம்மன்குளம், கணவன்துறை, கம்மாளமடம் உள்ளிட்ட பகுதிகளில், நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. மெதுார், தேவம்பட்டு, வேம்பேடு, பனப்பாக்கம் உள்ளிட்ட கிராமங்களில், நெற்பயிர்கள் பூச்சி தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளன. மொத்தம், 79 கிராமங்களில், 20,075 ஏக்கர் நெற்பயிர்கள், சேதமடைந்து உள்ளன.

கொற்றலை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால், சோழவரம் பகுதியில் உள்ள, கண்ணம்பாளையம், பசுவன்பாளையம் உள்ளிட்ட கிராமங்களில், 625 ஏக்கர் நெற்பயிர்கள் மழைநீர் மூழ்கி உள்ளன.சில நாட்களாக பெய்த கனமழைக்கு, கும்மிடிப்பூண்டி பகுதியில் ஏடூர், அயநல்லுார், கண்ணம்பாக்கம், ஏ.என்.குப்பம், கரடிபுத்துார், பூவலம்பேடு உள்ளிட்ட, 42 கிராமங்களில், 4,238 ஏக்கர் பரப்பளவு நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கின.

மேலும், 375 ஏக்கர் பரப்பளவு கொண்ட மரவள்ளி கிழங்கு தோட்டம், 65 ஏக்கர் பரப்பளவில் வெண்டை, தக்காளி, கத்திரி உள்ளிட்ட காய்கறி தோட்டங்களும், தண்ணீரில் மூழ்கின. வாழை தோட்டம்பள்ளிப்பட்டு தாலுகாவில், 250 ஏக்கர் பரப்பளவில் பயிரிட்டிருந்த நெற்பயிரும், 1,000 ஏக்கர் பரப்பளவில் இருந்த கரும்பு பயிரும் மழையால் சேதம் அடைந்துள்ளன.

இதுதவிர, அத்திமாஞ்சேரி பேட்டையில் பயிரிட்டிருந்த, 1 ஏக்கர் வாழை தோட்டம் சேதம் அடைந்துள்ளது.இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் வீரராக ராவ்

கூறுகையில், "15 நாட்கள் பெய்த கனமழையால், மாவட்டம் முழுவதும், 32,810 ஏக்கரில் நெற்பயிர் சேதம் அடைந்துள்ளது. மீதமுள்ள பயிர்கள் சேதாரம் குறித்து அந்தந்த துறை அலுவலர்கள் கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்," என்றார்.- நமது -நிருபர் குழு -

## 20 ஆண்டுகளுக்கு பின் நிரம்பியது ரெட்டி குளம்

திருத்தணி:சண்முகதீர்த்த குளம் என அழைக்கப்படும் ரெட்டிகுளம், 20 ஆண்டுகளுக்கு பின் தற்போது நிரம்பியும், அதில் நீராட முடியாமல் பக்தர்கள் தவித்து வருகின்றனர். திருத்தணி நகராட்சி, பெரியதெருவில் சண்முகதீர்த்த குளம் என்கிற ரெட்டிகுளம் உள்ளது. ஆண்டு தோறும் காணும் பொங்கலன்று உற்சவர் முருகப்பெருமான் இக்குளக்கரையில் உள்ள, மண்டபத்தில் எழுந்தருள்வார். அங்கு, உற்சவருக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் தீபாராதனைகள் நடைபெறுவது வழக்கம். பக்தர்கள் இக்குளத்தில் நீராடிய பின் முருகப்பெருமானை வழிபட்டு வந்தனர். இந்நிலையில், மழை பொய்த்ததால், 20 ஆண்டுகளாக இக்குளம் நீரின்றி வறண்டிருந்தது. தற்போது பெய்த கனமழையால், குளத்தில் தண்ணீர் நிரம்பியுள்ளது. ஆனால், குளத்தில் உள்ள கழிவுகளை அகற்றி துார்வார வேண்டும் என, அப்பகுதிவாசிகளின் கோரிக்கையை நகராட்சி நிர்வாகம் நிறைவேற்றவில்லை. இதனால், தண்ணீர் பச்சை நிறமாக உள்ளது. இதனால், குளம் நிரம்பியும், அதில் நீராட முடியாமல் பக்தர்கள் தவித்து வருகின்றனர்.

## பொன்னேரியில்79 மி., மழை

திருவள்ளூர:திருவள்ளூர் மாவட்டத்தில், நேற்று, மாலை, 4:00 மணி நிலவரப்படி, 330 மி.மீட்டர் மழை பதிவாகியது.அதில், அதிகபட்சமாக பொன்னேரியில், 79 மி.மீட்டர் மழையும், குறைந்தபட்சமாக, தாமரைப்பாக்கத்தில், 3 மி.மீட்டரும், பூந்தமல்லியில் மழை பெய்யவில்லை எனவும் பதிவாகி உள்ளது.

## வீடூர் அணையிலிருந்து உபரி நீர் வெளியேற்றம்

விக்கிரவாண்டி: வீடூர் அணைக்கு நீர் வரத்து தொடர்வதால், அணையிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்பட்டது. கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த கன மழை காரணமாக, விக்கிரவாண்டி அருகே உள்ள வீடூர் அணையில் நீர் மட்டம், கிடுகிடுவென உயர்ந்தது. அதன் முழு கொள்ளவான 32 அடியான, 605<<< மில்லியன் கன அடியை தொட்டது. கடந்த 29ம் தேதி காலை, அணைக்கு நீர் வரத்து அளவான 3 ஆயிரம் கன அடி நீரை, அதே அளவில் 9 ஷெட்டர்கள் மூலம் உபரி நீரை அணையிலிருந்து வெளியேற்றினர் .

நேற்று முன்தினம் இரவு பெய்த மழை காரணமாக, அணைக்கு நீர் வரத்து வினாடிக்கு ஆயிரத்து 500 கன அடி தண்ணீர் வரத்து வந்தது. இதையடுத்து அணையிலுள்ள 4 ஷெட்டர்களை மூடி, 5 ஷெட்டர்களை திறந்து நீர் வரத்து அளவான ஆயிரத்து 500 கன அடி உபரி நீரை மட்டும் வெளியேற்றினர்.

அணையை உதவி பொறியாளர்கள் கபிலன், சாந்தி, செல்வி, பணியாளர்கள் சகாதேவன் முருகன் ஆகியோர் தொடர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர் .

**உதயமாம்பட்டு ஏரி நிரம்பியது**

தியாகதுருகம்: தியாகதுருகம் பகுதியில் நேற்று காலை பெய்த கனமழை காரணமாக உதயமாம்பட்டு ஏரி நிரம்பியது. தியாகதுருகம் சுற்றுவட்டார பகுதியில் நேற்று அதிகாலை கனமழை பெய்தது. பூண்டி, அந்தியூர் வனப்பகுதியில் பெருக்கெடுத்த வெள்ளத்தால் வாய்க்கால் மூலம் உதயமாம்பட்டு பெரிய ஏரிக்கு நீர் வரத்து கிடைத்தது. இதனால் நீர்ப்பிடிப்பு பகுதியில் தண்ணீர் நிரம்பியது. உபரி நீர் வெளியேறி தியாகதுருகம் நகரின் வழியே புக்குளம் ஏரிக்கு சென்றது. நேற்று அதிகாலை பேரூராட்சி அலுவலகம் எதிரில் சேலம்- சென்னை தேசிய நெடுஞ்சாலை மீது ஒரு அடி உயரத்திற்கு தண்ணீர் சென்றது. சிறுவர்கள் அதில் மீன் பிடித்து மகிழ்ந்தனர். உதயமாம்பட்டு ஏரியின் நீர்ப்பிடிப்பு பகுதியை சிலர் ஆக்கிரமித்து விளைநிலங்களாக மாற்றியதால் ஏரி முழு கொள்ளளவை எட்டும் முன்னரே நிரம்பி, தண்ணீர் வீணாக வெளியேறியதாக ஆயக்கட்டு விவசாயிகள் தெரிவித்தனர். கனமழை காரணமாக புக்குளம், விளக்கூர், சித்தலூர் ஆகிய

ஏரிகளுக்கும் தண்ணீர் வரத்து கிடைத்து வேகமாக நிரம்பி வருகிறது. இது ஆயக்கட்டு பாசன விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## கோமுகி அணையில் உபரி நீர் வெளியேற்றம்

கச்சிராயபாளையம்: கோமுகி அணையிலிருந்து வினாடிக்கு ஆயிரம் கன அடி, உபரி நீர் வெளியேற்றப்படுகிறது. கல்வராயன்மலை மற்றும் கச்சிராயபாளையம் பகுதியில், நேற்று 30.2 மி.மீ., மழை பெய்தது. இதனால் கோமுகி அணைக்கு நீர் வரத்து ஆயிரம் கன அடியாக உயர்ந்தது. இதனை தொடர்ந்து, அணையின் பாதுகாப்பு கருதி, வரத்து நீர் முழுவதும் நேற்று காலை முதல், ஆற்று மதகு வழியாக வெளியேற்றி வருகின்றனர். உதவி பொறியாளர் பிரபு தலைமையிலான பொதுப் பணித்துறை ஊழியர்கள் கோமுகி அணையில், தொடர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## கஷாயம் தயாரிக்க பயன் படுத்தப்பட்ட நிலவேம்பு பொடி 15,000 கிலோ: 24.50 லட்சம் பேர் பயன்படுத்தியதாக சித்த மருத்துவர்கள் தகவல்

சேலம்: 'தமிழகத்தில், கடந்த ஐந்து நாள், 1,061 இடங்களில் நடந்த நிலவேம்பு கஷாய சித்த மருத்துவ சிறப்பு முகாமில், 15 ஆயிரம் கிலோ நிலவேம்பு உள்ளிட்ட மூலப்பொருட்களை பயன் படுத்தி தயாரிக்கப்பட்ட, கஷாயத்தை, 24.50 லட்சம் பேர் குடித்து பயன் பெற்றுள்ளனர்' என, சித்த மருத்துவ பிரிவு வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழகத்தில் பெய்து வரும் தொடர் மழையால், பரவி வரும் டெங்கு காய்ச்சல், தொற்று நோயை கட்டுப்படுத்தும் வகையில், 1,061 சிறப்பு முகாம் மூலம் நிலவேம்பு கஷாய குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. நவ.,24ல் துவங்கிய சிறப்பு முகாம், நவ.,29 வரை ஐந்து நாள், நடந்தது. 24.50 லட்சம் பேர்: இந்த முகாமின் முதல் நாளில், 1.20 லட்சம் பேர் நிலவேம்பு கசாயத்தை பருகிய நிலையில், மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வு காரணமாக, முகாமில் பங்கேற்போர் எண்ணிக்கை அதிகரித்தது. ஐந்து நாட்கள் நடந்த முகாமில், 24 லட்சத்து, 50 ஆயிரத்து, 135 பேர் நிலவேம்பு கஷாயத்தை பருகி உள்ளனர். ஐந்து நாள் நடந்த முகாமில்,

24.50 லட்சம் பேர் நிலவேம்பு காஷாயத்தை குடித்துள்ளனர். முகாமின் முதல் நாளில், 850 கிலோ, நிலவேம்பு பொடி பயன் படுத்தப்பட்ட நிலையில், அதன் பின்னர் பொதுமக்களின் வருகை அதிகரித்ததால், பயன் படுத்தப்படும் நிலவேம்பு கஷாய பொடியும் அதிகரிக்கப்பட்டது. கடந்த ஐந்து நாளில் நடந்த இந்த சிறப்பு முகாமில், 15 ஆயிரம் கிலோ நிலவேம்பு கஷாய பொடி, பயன் படுத்தி வழங்கப்பட்ட நிலவேம்பு கஷாயத்தை, 24.50 லட்சம் பேர் குடித்து பயன் பெற்றுள்ளதாக சித்த மருத்துவ பிரிவு டாக்டர்கள் தெரிவித்தனர்.

தினமும் 2,000 கிலோ: தமிழகத்தில் மழை தொடரும் நிலையில், தொற்று நோய் பரவலை தடுக்கும் வகையில், அரசு மருத்துவமனைகளில் நிலவேம்பு கஷாயத்தை இலவசமாக வழங்க அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. தமிழகத்தில் உள்ள, 43 மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, 30 மாவட்ட தலைமை மருத்துவமனை, 240 தாலுக்கா மருத்துவமனை, 1,751 ஆரம்ப சுகாதார நிலையம், 8,706 துணை சுகாதார நிலையம், எட்டு தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை, 195 மருந்தகம், நான்கு இந்திய மருத்துவமுறை மருத்துவமனை, 1,375 மருந்தகங்களில், சித்த மருத்துவ பிரிவு, ஹோமியோபதி துறை சார்பில், நிலவேம்பு கஷாய பொடி, தினமும், 2,000 கிலோ வரை வழங்கப்பட்டு, நிலவேம்பு கஷாயம் இலவசமாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. 30,000 பாக்ஸ்: சித்தமருத்துவ பிரிவு டாக்டர் ஒருவர் கூறியதாவது: நிலவேம்பு கஷாயம் தயாரிப்பில் பயன் படுத்தப்படும் பொடியில், நிலவேம்பு, வெட்டிவேர், விலாமிச்சுவேர், சந்தனத்தூள், பேய்புடல், கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு மற்றும் பற்பாடகம் ஆகியன இடம்பெற்றுள்ளது. இவை உடலுக்கு எவ்வித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாததோடு, வைரஸ் காய்ச்சலை கட்டுப்படுத்தி, வராமல் தடுக்கிறது. தமிழக அரசின் சார்பில், ஐந்து நாள் நடந்த முகாமில் மட்டும், 30 ஆயிரம் பாக்ஸ், அதாவது, 15 ஆயிரம் கிலோ பொடி மூலம், நிலவேம்பு கஷாயம் தயார் செய்யப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அரசு சிறப்பு முகாம்களில் மட்டுமின்றி மருத்துவமனைகள், அ.தி.மு.க.,வினரால் நடத்தப்பட்ட சிறப்பு முகாம்களிலும், நிலவேம்பு கஷாயம் வழங்கப்பட்டதால், நிலவேம்பு கஷாயம் பருகியவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து,

அரசு தலைமை மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் வழங்கப்படுகிறது. கடந்த அக்டோபர் மாதம் கடைசி வாரம் துவங்கி, தற்போது வரை, தமிழக சுகாதாரத்துறையின் மூலம், நிலவேம்பு கஷாய பொடி, பொதுமக்களின் பயன் பாட்டுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**தமிழகத்தில் நீர் நிலைகள் நிரம்புவதால் உரம் வாங்கி குவிப்பு: வெளி மாநிலங்களிலிருந்து 4.16 லட்சம் டன் கொள்முதல்: 25 லட்சம் டன் இருப்பு உள்ளதாக அதிகாரிகள் தகவல்**




சேலம்: தமிழகத்தில் நீர் நிலைகள் வேகமாக நிரம்பி வரும் நிலையில், விவசாயிகளுக்கு தங்கு தடையின்றி உரம் வழங்குவதற்காக, நவம்பர் மாதத்தில் மட்டும், 4.16 லட்சம் டன் உரம் ஆந்திரா, மத்திய பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து வரவழைக்கப்பட்டுள்ளது.

98 சதவீதம்: தமிழகத்தில், கடந்த, 2013-14ல் வறட்சி நிலவிய நிலையில், விளை நிலங்களின் அளவு, 43.47 லட்சம் ஹெக்டேராக இருந்தது. கடந்த, 2014ல் தென் மேற்கு பருவ மழை, வடகிழக்கு பருவ மழையும் சேர்த்து, 812.30 மி.மீ., மழை பெய்தததால், விளை நிலங்களின் அளவு 46.10 லட்சம் ஹெக்டேராக அதிகரித்தது. நடப்பாண்டில், நவம்பர் கடைசி வாரம் வரை, 645 மி.மீ., மழை பெய்துள்ளதால், 89 அணைகள், 39 ஆயிரத்து, 202 பெரிய ஏரிகள், 13 ஆயிரத்து, 779 சிறிய ஏரிகள், நிரம்பி வருகின்றன. மழை தொடரும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்து வருவதால், நடப்பாண்டில், 98 சதவீத

நீர்நிலைகள் நிரம்ப வாய்ப்புள்ளது. தட்டுப்பாடின்றி சப்ளை: நடப்பாண்டில், விளைநிலங்களின் பரப்பு, 55.02 லட்சம் ஹெக்டேராக அதிகரிக்கும் என, வேளாண்மைத்துறை அதிகாரிகள் கணித்துள்ளனர். கடந்த இரண்டு ஆண்டுகளை விட நடப்பாண்டு, விளை நிலங்களின் பரப்பு அதிகரிப்பதால், விவசாயத்துக்கு தேவையான உரங்களை தட்டுப்பாடு இன்றி சப்ளை செய்ய தேவையான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த, 2014-15 நிதியாண்டில், தமிழகத்துக்கு, 24.75 லட்சம் மெட்ரிக் டன் உரங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், 19.75 லட்சம் மெட்ரிக் டன் விநியோகிக்கப்பட்டதால், உரத்தட்டுப்பாடு ஏற்பட்டது. நடப்பாண்டில், உரத்தின் தேவை, 23.60 லட்சம் மெட்ரிக் டன் முதல், 30 லட்சம் மெட்ரிக் டன் வரை தேவை என கணக்கிடப்பட்டுள்ளது. ஆந்திரா, மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இருந்து யூரியா, டி.ஏ.பி., பொட்டாஷ், காம்ப்ளக்ஸ் ஆகிய உரம் வரவழைக்கப்பட்டுள்ளது.

உரம் இருப்பு: நவம்பர் மாதத்தில் மட்டும், தமிழகத்தில் உள்ள, 16 ரயில்வே கூட்ஷெட்டுக்களுக்கு, 4.16 லட்சம் மெட்ரிக் டன் உரம் வந்துள்ளது. சேலம் ரயில்வே கூட்ஷெட்டுக்கு, 26 ஆயிரம் டன் உரம் வந்துள்ளது. நவம்பர் மாதத்தில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்த உரங்கள் போக, நவ.,28 வரை, வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள், தனியாரிடம், 25 லட்சம் மெட்ரிக் டன் உரம் இருப்பு உள்ளது. விவசாய பணிகள் விறுவிறுப் படைந்துள்ள நிலையில், மேலும், 10 லட்சம் மெட்ரிக் டன் உரங்களுக்கு, ஆந்திரா மாநிலத்துக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டுள்ளதால், டிசம்பரில் வந்து சேரும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

வேளாண்மைத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: தமிழகத்தில் நவ.,25 கணக்கின்படி, 25 லட்சம் மெட்ரிக் டன் உரம் இருப்பு உள்ளது. விவசாய பணிகள் விறுவிறுப்படைந்துள்ள நிலையில், டிசம்பர் மாதத்தில், 20 லட்சம் மெட்ரிக் டன் உரம் விநியோகிக்கப்பட வாய்ப்பு உள்ளது. தட்டுப்பாடு இன்றி உரம் வழங்கும் வகையில், டிசம்பர் மாதத்தில், 10 லட்சம் மெட்ரிக் டன் உரம்

ரயில் மூலம் தமிழகத்தின், 16 ரயில்வே கூட்ஷெட்டுக்களுக்கும் வர உள்ளது. நடப்பாண்டில், உரத்தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடமில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

**வரட்டுப்பள்ளம் அணை நிரம்பியது: ஏரிகளுக்கு நீர் வரத்து**

அந்தியூர்: அந்தியூரை அடுத்துள்ள வரட்டுப்பள்ளம் அணை 33.5 அடி உயரம் கொண்டது. அணையினால், மூன்றாயிரம் ஏக்கர் பரப்பிலான விவசாய நிலங்கள் பாசனம் பெறுகிறது. கடந்த, 15 நாட்களுக்கு முன்பு, பர்கூர் மலைப்பகுதியில் பெய்த தொடர் மழையால், அணை நிரம்பியது. இந்நிலையில் நேற்று பர்கூர் வனப்பகுதியில் பெய்த கனமழையால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. இதனால், அணையில் இருந்து உபரி நீர் வெளியேற்றப்பட்டது. கிழக்கு பகுதியில் வெளியேறும் தண்ணீர் கொட்டி சமுத்திரம் ஏரிக்கும், மேற்கு பகுதியில் இருந்து வெளியேறும் தண்ணீர் அந்தியூர் கொல்லபாளையம் ஏரிக்கும் சென்றது. இதுநாள் வரை பெய்த மழையால், ஏரிகளுக்கு நீர்வரத்து எதுவும் இல்லை. இந்நிலையில், வரட்டுபள்ளம் அணையில் இருந்து இரண்டு ஏரிக்கும் தண்ணீர் வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**புங்கம்பாடியில் அதிகபட்ச மழை**

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் நேற்று முன் தினம் இரவு கன மழை பெய்தது. நேற்று விடியற்காலையிலும் மழை தொடர்ந்தது. இதனால் நீர் நிலைகளில் மழை நீர் வெள்ளமென பெருக்கெடுத்தது. மாவட்டத்தில் பெய்த மழையளவு விவரம் (மி.மீ.,ல்): பெரும்பள்ளம், ??, பவானிசாகர் 52.6, சத்தியமங்கலம் 44, கொடிவேரி 45, கோபி 48.1, எலந்தகுட்டை மேடு 55, கவுந்தப்பாடி 46, பெருந்துறை 48, பவானி 42, ஓலப்பாளையம் 47, புங்கம்பாடி 66, ஈரோடு 54, மொடக்குறிச்சி 31, அரச்சலூர் 15, சென்னிமலை 42, சிவகிரி 42, முத்தூர் 20, மங்களப்பட்டி 10, வெள்ளகோவில் 13.8, ஒரத்துப்பாளையம் 41.

## நெல் கொள்முதலுக்கு ஈரப்பத சதவீதத்தை அதிகரிக்க கோரிக்கை

கோபி: தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பாசன பகுதிகளில், முதல்போக நெல் சாகுபடி அறுவடை நிலைக்கு எட்டியுள்ளது. எனவே விவசாயிகள் பயன்பெற, டி.என்.,பாளையம், கள்ளிப்பட்டி, அத்தாணி, காசிபாளையம், வள்ளியம்பாளையம், நஞ்சகவுண்டன்பாளையம், பொலவக்காலிபாளையம், கூகலூர், புதுக்கரைப்புதூர், பெருந்தலையூர் ஆகிய பத்து இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க பாசன விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும், தற்போது மழைக்காலமாக இருப்பதால், நெல்லின் ஈரப்பதத்தை ஒரு சதவீதம் அதிகப்படுத்தி, கொள்முதல் செய்யவும் பாசன விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 5 நாட்களில்,2000 பேருக்கு நிலவேம்பு கஷாயம்

புன்செய் புளியம்பட்டி: பரவலாக பெய்துவரும் மழையால் ஏற்படும் காய்ச்சல், தொற்று நோய்களை தடுக்கும் வகையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, நிலவேம்பு கஷாயம் வழங்கும் சிறப்பு முகாம், புன்செய் புளியம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தின் சித்த மருத்துவ பிரிவின் சார்பில், கடந்த 25 ஆம் தேதி முதல் பொதுமக்களுக்கு, காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நிலவேம்பு கஷாயம் வழங்கப்பட்டது. கடந்த 5 நாட்கள் நடந்த முகாமில், 2000 பேருக்கு நிலவேம்பு கஷாயம் வழங்கப்பட்டதாக சித்த மருத்துவர் ஜெயசுதா தெரிவித்தார்.

## தோட்டக்கலை துறை மூலம் இயற்கை விவசாயத்துக்கு மானியம்

ஊட்டி: 'தோட்டக்கலை துறை மூலம், இயற்கை வழி விவசாயத்துக்கு மானியம் வழங்கப்படுகிறது' என, தெரிவிக்கப்பட்டது. ஊட்டி சேரிங்கிராஸ் தோட்டக்கலை வளாகத்தில், 'இயற்கை வேளாண்மை' குறித்த கருத்தரங்கு நடந்தது.

சிறப்பு விருந்தினராக பங்கேற்ற, மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் டாக்டர் ராம்சுந்தர் பேசுகையில், “தேயிலை, காய்கறி சாகுபடியில் இயற்கை உரங்களை பயன்படுத்தி விவசாயம் செய்ய, தோட்டக்கலை துறை சார்பில்,

மானிய விலையில் உரம், இடு பொருட்கள் வழங்கப்படுகின்றன; தேவையான தொழில்நுட்ப உதவிகளும் வழங்கப்படுகின்றன. இயற்கை வேளாண்மைக்கு மாடு வளர்ப்பு மிக அவசியம்," என்றார்.

'உபாசி' வேளாண் அறிவியல் நிலைய தலைவர் ராமமூர்த்தி பேசுகையில்,"இயற்கை உரங்கள் மூலம் விளைவிக்கப்படும் பசுந்தேயிலையை மூலப்பொருளாக கொண்டு உற்பத்தி செய்யப்படும் தேயிலை துாளுக்கு சர்வதேச சந்தையில் கிராக்கி அதிகம். இயற்கை வேளாண்மைக்கு, மண் வளம் மிக முக்கியம்; எனவே, விவசாயிகள் மண் வளத்தை பாதுகாக்க வேண்டும்," என்றார்.

இதில், 'பெரஸ்' அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மகேஷ் மெல்வின் வரவேற்றார். தலைவர் டாக்டர் பெருமாள், முதன்மை செயல் இயக்குனர் ஜோஸ்டின், விவசாய ஆராய்ச்சி மைய பேராசிரியர் செல்வராஜ் உட்பட பலர் பங்கேற்றனர்.

**கால்நடை மருத்துவ முகாம்**

ஓசூர்: ஓசூர் நகராட்சிக்கு உட்பட்ட ஆவலப்பள்ளியில், பேரிடர் மேலாண்மை வெள்ள நிவாரண பணிகள் தொடர்பாக, சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. ஓசூர் கால்நடை உதவி மருத்துவர் துரைசாமி தலைமையில், 62 கறவை மாடுகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இதில், 23 மாடுகளுக்கு சினை பரிசோதனை செய்யப்பட்டு, மலட்டு தன்மை நீக்கப்பட்டது. அதேபோல், 180 செம்மறி ஆடுகள் மற்றும், 135 வெள்ளாடுகளுக்கு, குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது. 42 விவசாயிகளின் கால்நடைகளுக்கு, தாது உப்பு கலவை வழங்கப்பட்டது.

**லாபமான கால்நடை பண்ணையம்: பயிற்சி பெற அதிகாரி அழைப்பு**

கரூர்: கரூர் மாவட்டத்தில் லாபகரமான கால்நடை பண்ணையம் அமைக்க, இலவச பயற்சி பெற கால்நடை ஆராய்ச்சி மைய அதிகாரி அழைப்பு விடுத்துள்ளார்.

கரூர் மாவட்டம் பண்டுதகாரன்புதூரில் அமைந்துள்ள கால்நடை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரக தொழில் முனைவோர் மற்றும் பயிற்சி மையத்தின் நிதியுதவியுடன், 'லாபகரமான கால்நடை பண்ணையம்' பயிற்சி வரும், 7 முதல், 12ம் தேதி வரை, ஆறு நாட்களுக்கு இலவசப்பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இதுகுறித்து, ஆராய்ச்சி மைய இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர் அகிலா கூறியதாவது: லாபகரமான கால்நடை பண்ணையம்' பயிற்சியில் அறிவியல் ரீதியான கறவை மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் பன்றி வளர்ப்பு ஆகியவற்றில் முக்கிய பங்களிக்கும் பராமரிப்பு முறைகளான இனங்களை தேர்வு செய்தல். பண்ணை வீட்டமைப்பு, தீவன மேலாண்மை, கால்நடை மற்றும் கோழிகளைத் தாக்கும் நோய்கள், அவற்றை தடுக்கும் முறைகள், மூலிகை மருத்துவ சிகிச்சை முறைகள், விற்பனை உத்திகள், வங்கிக்கடனுதவி, பண்ணைக்கான காப்பீடு மற்றும் பண்ணைப் பொருளாதாரம் ஆகிய தலைப்புகள் மற்றும் பசுந்தீவன உற்பத்தி, பால் பொருட்கள் தயாரிப்பு. மண்புழு உரம் தயாரிப்பு, சாண எரிவாயு உற்பத்தி ஆகிய தலைப்புகள் குறித்து பல்கலைக்கழக பேராசிரியர்களால் நடத்தப்பட உள்ளது. பயிற்சியில் பங்கேற்க ஆர்வம் உள்ளவர்கள் அலுவலக போன் எண்ணில், (04324-294335) தொடர்பு கொள்ளலாம். விரைந்து முன்பதிவு செய்பவர்கள், ஆறு நாட்களும் தவறாமல் பயிற்சி மையத்திற்கு வர வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**அமராவதியில் ஜன.,யில் தண்ணீர் திறக்க விவசாயிகள் கோரிக்கை**

க.பரமத்தி: அமராவதி அணையிலிருந்து, பொதுப்பணித்துறையினர் தற்போது தண்ணீர் திறப்பதை விடுத்து, ஜனவரியில் தண்ணீர் திறந்தால் அறுவடைக்கு உதவியாக இருக்கும் என்று, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமராவதி அணைக்கு, மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்த கன மழையால், அணையின் முழு கொள்ளவான, 90 அடியில் தற்போது, 88 அடியை எட்டியுள்ளது. இதையடுத்து, தமிழக அரசு நேற்று, தண்ணீர் திறக்க உத்தரவிட்டது. இந்நிலையில், வடகிழக்கு பருவ மழையால், கரூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் கடந்த, 20 நாட்களாக பெய்த கன மழை தண்ணீருடன், நொய்யல் ஆற்றின் உபரிநீருடன் கலந்து வருவதால், அமராவதி ஆற்றில், 700 கன அடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது. இந்த தண்ணீரே, இம்மாதம் வரை தாக்ககுப் பிடிக்கும் நிலையில், தற்போது தண்ணீர் திறப்பதால், விவசாய பயிர்கள் மேலும் மோசமடைய வாய்ப்புள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: வடகிழக்கு பருவ மழையால் அமராவதி ஆற்றங்கரையை ஒட்டியுள்ள விவசாய நிலங்களில், கரும்பு, வாழை, மஞ்சள் போன்ற பயிர்களின் விளை நிலங்களில் தண்ணீர் தேங்கி பயிர்கள் அழுகி வருகின்றன. மேலும் தண்ணீர் திறப்பால் ஆற்றில் தண்ணீர் வீணாக போகும். பொதுப்பணித்துறையினர் அணை முழு கொள்ளளவு எட்டிய பின் திறந்தால் அறுவடை சமயத்தில் தங்குதடையின்றி விவசாயத்திற்கு தண்ணீர் கிடைக்க வாய்ப்புள்ளது. எனவே, தற்போது தண்ணீர் திறப்பதை விடுத்து, வரும், ஜனவரியில் தண்ணீர் திறந்தால், உதவியாக இருக்கும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**மானாவாரி சோளம்:அறுவடைக்கு தயார்**

தேவாரம்;தேவாரம் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள மானாவாரி சோளம் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. உத்தமபாளையம் தாலுகாவில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துள்ள தேவாரம், கோம்பை, பண்ணைப்புரம், சங்கராபுரம், டி.சிந்தலைச்சேரி, காமாட்சிபுரம், சீப்பாலக்கோட்டை பகுதியில் 5 ஆயிரம் ஏக்கரில் மானாவாரி சோளம் பயிரிடப்பட்டுள்ளது. இவை தற்போது அறுவடைக்கு தயாராக உள்ளது. விவசாயிகள் சோளத்தை கதிர்களிலிருந்து பிரிக்க ரோட்டில் பரப்புவது வழக்கம். இதனால் விபத்துகள் ஏற்படுகின்றன. இதை தடுக்க களங்களில் கதிர்களை உலர்த்தி, இயந்திரம் மூலம் தானியங்களை

பிரிக்க வேண்டும். டி.சிந்தலைச்சேரி விவசாயி சலேத்து கூறுகையில், ""தாமதமாக பெய்த மழையால் சில இடங்களில் சோளக்கதிர்களில் கருப்பு நிறம் படிந்துள்ளது. பல இடங்களில் கதிர்கள் பெருக்காமல் உள்ளன. எதிர்பார்த்த பலன் இந்த ஆண்டு கிடைக்காது. தற்போது பெய்த மழையால் நஷ்டம் ஏற்படாமல் தவிர்க்கப்பட்டுள்ளது," என்றார்.

**18ம் கால்வாயில் தண்ணீர் திறப்பு**

கூடலூர்;லோயர்கேம்ப் பெரியாற்றின் தலை மதகு பகுதியில் இருந்து, 18 ம் கால்வாயில் நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. லோயர் கேம்பில் துவங்கி, போடி மீனாட்சிபுரம் வரையுள்ள 18 ம் கால்வாயில், பாசனத்திற்காக நேற்று லோயர் கேம்ப் தலை மதகு பகுதியில், தேனி கலெக்டர் வெங்கடாசலம் தண்ணீரை திறந்து விட்டார். வினாடிக்கு 279 கன அடி வீதம், 9 நாட்களுக்கு திறக்கப்பட்டுள்ள இந்த தண்ணீர் மூலம் 4615 ஏக்கர் பாசன நிலங்கள் பாசன வசதி பெறும். இக்கால்வாயில் திறக்கப்பட்ட தண்ணீர், புதுப்பட்டி, அனுமந்தன்பட்டி, பண்ணைப்புரம், கோம்பை, தேவாரம், சிந்தலச்சேரி, சங்கராபுரம், வெம்பக்கோட்டை, பொட்டிபுரம், லட்சுமிநாயக்கன்பட்டி, மீனாட்சிபுரம், டொம்புச்சேரி, கோடாங்கிபட்டி உள்ளிட்ட 13 கிராமங்களில் உள்ள 44 கண்மாய்கள் பயன்பெறும். இக்கால்வாயில் ஆண்டுதோறும் அக்டோபரில் தண்ணீர் திறப்பது வழக்கம். சமீபத்தில் பெய்த மழையால் தலைமதகு அருகே கால்வாயில் ஏற்பட்ட மண் சரிவு ஏற்பட்டது.

தற்போது பராமரிப்பு பணிகள் முடிந்து ஒரு மாதம் தாமதமாக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

**மண் புற்றுகள், மரப்பொந்துகளில்கிடைக்கும் கொசுத்தேனுக்கு மவுசு:ஒரு லிட்டர் ரூ.800 க்கு விற்பனை**

தேனி;தேனி மாவட்டத்தில் மண் புற்றுகளிலும், மரப்பொந்துகளிலும் கிடைக்கும் கொசுத்தேனு திடீர் மவுசு ஏற்பட்டுள்ளது. அதை விலைக்கு வாங்க

வியாபாரிகளிடம் போட்டி ஏற்பட்டுள்ளது. தற்போது கொசுத்தேன் உற்பத்தி சீசன் துவங்கி உள்ளது. வரும் டிச., 15 க்கு மேல் இதற்கான சீசன் மும்முரமான துவங்கி, சித்திரை மாதம் வரை இருக்கும். வழக்கமான தேனீக்கள் சேகரிக்கும் தேனை விட, இந்த கொசுத்தேனீக்கள் சேகரிக்கும் தேனுக்கு சுவையும், மருத்துவ குணமும் அதிகம். இந்த வகை தேன் தேனி மாவட்டத்தில் மலைக்கிராமங்களில் உள்ள மண் புற்றுகள், மரப்பொந்துகள், காட்டுப்பகுதிகளில் உள்ள கட்டடங்களின் பொந்துகளில் அதிகம் கிடைக்கும். தோட்டங்கள், விவசாய நிலங்களிலும் கொசுத்தேனீக்கள் கூடு கட்டும். இதில் உள்ள மாவு போன்ற பொருள் உயர்ரக மருந்து பொருளாக பயன்படுத்தப்படுகிறது.

மா மரப்பூக்கள், சீமைக்கருவேல் பூக்கள் போன்ற நுட்பமான சிறிய ரக, பூக்களில் இருந்து கூட இந்த வகை தேனீக்கள் தேனை சேகரித்து விடும். இந்த கொசுத்தேன் மூலம் மருந்துகள் தயாரிப்பதற்காக, சித்த மருத்துவர்கள், கேரள மருத்துவர்கள் அதிகம் வாங்குகின்றனர். எனவே மலையடிவார கிராமங்களில் இந்த தேனை சேகரிப்பவர்களிடம் "அட்வான்ஸ்' கொடுத்து வைத்து, விலைக்கு வாங்குகின்றனர்.

கடும் கிராக்கி நிலவுவதால் ஒரு லிட்டர் தேன் 800 ரூபாய்க்கு மேல் விற்கப்படுகிறது. தற்போது நிலவும் பருவநிலை தேன் சேகரிப்பவர்களுக்கு சாதகமாக உள்ளதால் கொசுத்தேன் சேகரிப்பு பணி மும்முரமாக நடந்து வருகிறது.

**தேனி மாவட்டத்தில் மீண்டும் மழை**

தேனி:தேனி மாவட்டத்தில் ஒருவாரத்திற்கு பிறகு நேற்று முன்தினம் மீண்டும் மழை பெய்தது. தேனி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை கடந்த ஆண்டுகளை விட அதிகளவு பெய்தது. இதனால் அனைத்து அணைகளும் நிரம்பின. விவசாயத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த நவ., 23 ல் மாவட்டத்தில் 102.50 மி.மீ, மழையும், மறுநாள் 7 மி.மீ., மழையும்

பதிவானது. அதன்பின் மழை இல்லை. இதனால் அணைகளுக்கு நீர் வரத்து குறைந்தது.

அதன்பின், நேற்று தேனி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. மழையளவு(மில்லி மீட்டரில்) வருமாறு:

ஆண்டிபட்டி 11.4, அரண்மனைப்புதூர் 8.4, போடி 3.6, கூடலூர் 15, மஞ்சளாறு 20, பெரியகுளம் 11, பெரியாறு 16.8, சோத்துப்பாறை 22, தேக்கடி 19.2, உத்தமபாளையம் 38, வைகை அணை 12, வீரபாண்டி 10. மாவட்டம் முழுவதும் மொத்தம் 187 மி.மீ.,மழை பதிவானது. இந்த மழையால் வைகை அணை நீர்மட்டம் 66.99 அடியாக (உயரம் 71அடி) உள்ளது. வினாடிக்கு 1,799 கன அடிநீர் வரத்தும், 40.60 கன அடி நீர் வெளியேற்றமும் உள்ளது. பெரியாறு அணை நீர்மட்டம் 138.80 அடியாக உயர்ந்துள்ளது. வினாடிக்கு 1,687 கன அடிநீர் வரத்து உள்ளது. மஞ்சளாறு அணை நீர்மட்டம் 56.60 அடியாக (உயரம் 57 அடி) உள்ளது. வினாடிக்கு 198 கனஅடி நீர் வரத்தும், அதே அளவுநீர் வெளியேற்றமும் உள்ளது. சோத்துப்பாறை அணையில் 126.28 அடியாக (உயரம் 126.28 அடி) உள்ளது. வினாடிக்கு 230 கன அடிநீர் வரத்தும், அதே அளவு வெளியேற்றமும் உள்ளது. சண்முகநதி அணையின் நீர் மட்டம் 52.73 அடியாக உயர்ந்து முழு கொள்ளவை எட்டியுள்ளது. வினாடிக்கு 67கன அடிநீர் வரத்து உள்ளது.

**மழையால் உதிர்ந்த பூக்கள்மொச்சை சாகுபடி பாதிப்பு**

தேனி:தேனி மாவட்டத்தில் பெய்து வரும் மழையால் மொச்சையில் பூக்கள் உதிர்ந்து விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.தேனி மாவட்டத்தில் கம்பம், கூடலூர், தேவாரம், கோம்பை, கடமலைக்குண்டு, வருஷநாடு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மானாவாரி நிலங்களில் ஆண்டு தோறும் 1500 ஏக்கரில் மொச்சை சாகுபடி நடைபெறும். இந்த ஆண்டு 700 ஏக்கரில் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டுள்ள மொச்சையில் ஆரம்பத்தில் மஞ்சள் தேமல் நோய் பாதிப்பு

ஏற்பட்டது. சமீபத்தில் பெய்த மழையால் மொச்சை செடியில் பூத்திருந்த பூக்கள் அழுகி உதிர்ந்தன. இதனால் காய் பிடிப்பு குறைந்துள்ளது.
மார்கெட்டிற்கு மொச்சை வரத்து கார்த்திகையில் துவங்கி தை மாதம் வரை நீடிக்கும். மழை மற்றும் நோய் பாதிப்பால் தற்போது மார்கெட்டிற்கு மொச்சை வரத்து மிக குறைவாகவே உள்ளது. விவசாயிகளிடம் ஒரு கிலோ ரூ.40க்கு கொள்முதல் செய்து சில்லரை விலையில் கிலோ ரூ.60 க்கு வியாபாரிகள் விற்கின்றனர்.

**திருப்புவனத்தில் 9 செ.மீ., மழை:கூடுதல் ஏக்கரில் விவசாய பணி**

திருப்புவனம்;திருப்புவனத்தில் நேற்று முன்தினம் இரவு 90.8 மி.மீ., மழை பதிவாகி உள்ளது.திருப்புவனம் வட்டாரத்தில் கடந்தாண்டை விட கூடுதலான பரப்பளவில் நெல் நடவு பணி நடைபெற வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். தமிழகம் முழுவதும் வடகிழக்கு பருவ மழை பெய்தாலும் சிவகங்கை,ராமநாதபுர மாவட்டங்களில் போதிய மழை இல்லை. எனவே வைகை பூர்வீக பாசன விவசாயிகள் சங்கம், தமிழக அரசுக்கு வைகை ஆற்றில் முழுமையான அளவு தண்ணீர் திறக்க வலியுறுத்தி இருந்தது.
இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை ஆறு மணி முதல் சாரல் மழை பெய்ய ஆரம்பித்தது. இரவு முழுவதும் பெய்த மழை காரணமாக மழையளவு 90.8 மி.மீ.,ஆக பதிவாகி உள்ளது. தற்போது கண்மாய்களில் ஓரளவு தண்ணீர் தேங்கியுள்ளது. கண்மாய்களில் உள்ள நீர் இருப்பு பத்து முதல் 20 நாட்கள் வரை தாங்க வாய்ப்புள்ளது என்கின்றனர் விவசாயிகள்.
வெள்ளிக்குறிச்சி விவசாயி குமார் கூறுகையில்,"" வைகை ஆற்றில் வந்த மழை தண்ணீர் ஓரளவிற்கு கண்மாயில் தேங்கியுள்ளது. இந்த தண்ணீர் 15 நாட்கள் வரை விவசாயத்திற்கு பயன்படும். மேலும் வைகை ஆற்றில் சிவகங்கை மாவட்டத்திற்கு தண்ணீர் திறக்க உள்ளனர்.
இதனால் கண்மாய்களுக்கு கூடுதல் நீர் வர வாய்ப்புள்ளது. நேற்று பெய்த மழை காரணமாக வயல்களில் தண்ணீர் தேங்கியுள்ளது.இந்தாண்டு விவசாயம் முழுமையாக நடைபெறும்," என்றார். வேளாண் அதிகாரிகள்

கூறுகையில்,""கடந்தாண்டு 2ஆயிரத்து 300 எக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி நடந்தது.

இந்தாண்டு இதுவரை ஆயிரத்து 87 எக்டேரில் நெல் சாகுபடி நடந்தது வருகிறது.வரும் டிசம்பர் மாதத்திற்குள் மேலும் அதிகரிக்கும். இதே போல வாழை கடந்தாண்டு 142 எக்டேரிலும்,மிளகாய் 193 எக்டேரிலும் நடவு செய்யப்பட்டது.

இந்தாண்டு இதுவரை வாழை சராசரி 225 எக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது மழை பெய்து வருவதாலும், வைகை ஆற்றில் நீர் வரத்து வர வாய்ப்பு உள்ளதாலும் இந்தாண்டு விவசாய பணிகள் இன்னும் கூடுதலாக அதிகரிக்கும்," என தெரிவித்தனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு நிலை: மேலும் 3 நாள் மழை நீடிக்கும்**

தென் மேற்கு வங்கக் கடல் பகுதியில் நிலை கொண்டுள்ள காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக, கடலோர மாவட்டங்களில் ஒருசில இடங்களில் பலத்த மழை அல்லது மிக பலத்த மழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னையில் மைய இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் செய்தியாளர்களிடம் திங்கள்கிழமை கூறியதாவது: ஞாயிற்றுக் கிழமையன்று தென் கிழக்கு வங்கக் கடல், அதை ஒட்டிய தெற்கு அந்தமான் கடல் பகுதியில், புதிதாக உருவான காற்றழுத்தத் தாழ்வு நிலை மேற்கு நோக்கி நகர்ந்துள்ளது. இது, திங்கள்கிழமை காலை 8.30 மணியளவில் தென் மேற்கு வங்கக் கடல், அதை ஒட்டிய பகுதியில் நிலை கொண்டுள்ளது. முன்னறிவிப்பு: அடுத்த 24 மணி நேரத்தில், கடலோர மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும், உள் மாவட்டங்களில் அனேக இடங்களிலும்

மழை பெய்யும். குறிப்பாக, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, வேலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கோவை, ஈரோடு, கரூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் பலத்த மழை இருக்கும். மேலும், கடலோர மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் பலத்த மழை அல்லது மிக பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது.

3 நாள்களுக்கு மழை நீடிக்கும்: சென்னை மாநகரில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். சில பகுதிகளில் விட்டு விட்டு மழை இருக்கும். பலத்த மழை பெய்யவும் வாய்ப்புண்டு. குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக, அடுத்து வரும் 3 அல்லது 4 நாள்களுக்கு நல்ல மழையை எதிர்பார்க்கலாம்.

எச்சரிக்கை: தமிழகம், புதுச்சேரி, ஆந்திரம் ஆகிய கடலோரப் பகுதிகளில், வட கிழக்கு திசையிலிருந்து மணிக்கு 45 முதல் 55 கி.மீ வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். குறிப்பாக, ஆந்திர கடலோரப் பகுதிகளிலுள்ள மீனவர்கள் கடலுக்குள் எச்சரிக்கையுடன் செல்ல வேண்டும் என்றார்.

**"சராசரி அளவைவிட கூடுதல் மழை'**

சராசரி அளவைவிட கூடுதலாகவே மழை பதிவானது என வானிலை ஆய்வு மைய இயக்குநர் ரமணன் தெரிவித்தார். இதுகுறித்து அவர் கூறியதாவது: வட கிழக்குப் பருவ மழை காலத்தில், இதுவரை சென்னை மாவட்டத்தில் 1,170 மி.மீட்டர் மழை பதிவானது. மாவட்டத்தின் சராசரி மழையளவு 790 மி.மீட்டர் ஆகும். அதே போல், தமிழகத்தில் சராசரி அளவைக் காட்டிலும் கூடுதலாக 70 மி.மீ. கிடைத்துள்ளது. அதாவது, 510 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. மாநிலத்தின் சராசரி மழையளவு 440 மி.மீ. மழை நிலவரம்: திங்கள்கிழமை காலை வரையிலான கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக திருவாரூர் மாவட்டம் குடவாசலில் 120 மி.மீ. மழை பதிவாகியது. இதேபோல் விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்தில் 100 மி.மீ., வானூர், சிவகங்கை மாவட்டம் திருப்புவனம், விழுப்புரம், புதுக்கோட்டை மாவட்டம் மணல்மேல்குடி ஆகிய இடங்களில் தலா 90 மி.மீ. மழை பதிவாகியது. மேலும், தஞ்சாவூர், திருநெல்வேலி மாவட்டம் ஆய்க்குடி, திருவாரூர், அரியலூர் மாவட்டம்

திருமானூர், தஞ்சை மாவட்டம் பாபநாசம் உள்ளிட்ட இடங்களில் தலா 80 மி.மீ. மழை பதிவானது என்றார் ரமணன்.

**நாகை அருகே வெள்ளத்தால் நெற் கதிர்கள் பாதிப்பு: விவசாயி தற்கொலை**

நாகை மாவட்டம், வேதாரண்யத்தை அடுத்த தலைஞாயிறு அருகே அறுவடைக்குத் தயாராக இருந்த நெற் கதிர்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதால் மனமுடைந்த விவசாயி விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார்.

ஆய்மூர் ஊராட்சி, பெருமழை கீழத்தெருவைச் சேர்ந்த மகாலிங்கம் மகன் ராமலிங்கம் (50). விவசாயியான இவர், தலைஞாயிறு 5-ஆம் சேத்தி பகுதியில் 5 ஏக்கரில் நெல் சாகுபடி செய்திருந்தார். அறுவடைக்குத் தயாராக இருந்த இந்த நெல் வயல், அண்மையில் பெய்த தொடர் மழையால் வெள்ளநீர் சூழ்ந்து பாதிக்கப்பட்டது.

இதனால் மனமுடைந்த ராமலிங்கம், கடந்த 26-ஆம் தேதி எலி மருந்தை சாப்பிட்டு தற்கொலைக்கு முயன்றார். திருத்துறைப்பூண்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி ராமலிங்கம் ஞாயிற்றுக்கிழமை இரவு உயிரிழந்தார். இதுகுறித்து தலைஞாயிறு போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

**திருமலையில் மீண்டும் கனமழை**



திருமலையில் மீண்டும் கனமழை பெய்யத் தொடங்கி உள்ளது. திருமலையில் சனிக்கிழமை முதல் மீண்டும் கனமழை தொடங்கி உள்ளது. இதனால் திருமலை இரண்டாவது மலைப்பாதையில் நடைபெற்றுவரும் செப்பனிடும் பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது. திருமலையில் கனமழை பெய்து வருவதால் தரிசனத்துக்குச் செல்லும் பக்தர்கள் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர். மழையுடன் இரவில் பனி பெய்து வருவதால் பக்தர்கள் குளிரால் அவதிப்படுகின்றனர். எனவே திருமலைக்கு வரும் பக்தர்கள் தகுந்த முன்னேற்பாடுகளுடன் வருமாறு தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

**விளைநிலங்கள் வழியாக எரிவாயு குழாய் அமைக்கும் திட்டத்துக்கு விவசாயிகள் எதிர்ப்பு**

மதுரை மாவட்டத்தில் விளைநிலங்கள் வழியாக எரிவாயு குழாய் அமைக்கும் திட்டத்துக்கு விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

சென்னை எண்ணூரில் இருந்து செங்கல்பட்டு, புதுச்சேரி, திருச்சி வழியாக மதுரை வரை எரிவாயு குழாய் அமைக்கும் திட்டத்தை இந்தியன் ஆயில் கார்ப்பொரேசன் நிறுவனம் செயல்படுத்த உள்ளது. மதுரை மாவட்டத்தில மேலூர், மதுரை கிழக்கு, மதுரை வடக்கு, வாடிப்பட்டி ஆகிய வட்டங்களில் ஏராளமான விளைநிலங்கள் வழியாக குழாய் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக, ஓராண்டுக்கு முன்பு நில உரிமையாளர்களுக்கு நோட்டீஸ் வழங்கப்பட்ட நிலையில், கடும் எதிர்ப்புக்

கிளம்பியதால் இத் திட்டம் கிடப்பில் போடப்பட்டிருந்தது. இந்நிலையில், தற்போது விவசாயிகளுக்கு வருவாய் கிராமம் வாரியாக நோட்டீஸ் வழங்கப்பட்டு ஆட்சேபணை மற்றும் கருத்துத் தெரிவிக்க ஆஜராகுமாறு நில உரிமையாளர்களுக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டு வருகிறது. இத் திட்டத்தைக் கைவிட வேண்டும் என விவசாயிகள் பலரும் மாவட்ட ஆட்சியர் எல்.சுப்பிரமணியனிடம் மனு அளித்துள்ளனர். இதுதொடர்பாக குலமங்கலம் பகுதியைச் சேர்ந்த விவசாயி திருப்பதி கூறியது: எரிவாயு குழாய் அமைக்க திட்டமிடப்பட்ட பகுதி அனைத்தும் பெரியாறு பாசனப் பகுதியாகும்.

இதில் எரிவாயு குழாய் அமைத்தால் நெல் சாகுபடி கடுமையாகப் பாதிக்கும். எரிவாயு குழாய் அமைக்கும்போது, நில உரிமையாளர்களைப் பாதிக்கும் வகையில் பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்படுகிறது. இந்தியன் ஆயில் கார்ப்பொரேசன் நிறுவனத்துக்கு கப்பலூரில் ஏற்கெனவே ஒரு எரிவாயு யூனிட் இருக்கிறது. இந்நிலையில் விவசாயிகளைப் பாதிக்கும் வகையில் எரிவாயு குழாய் அமைக்கும் திட்டம் தேவையற்றது என்றார்.

**சம்பங்கி தோட்டத்தில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை பயிற்சி**

சம்பங்கிப்பூ தோட்டத்தில் மாவுப்பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக அலங்காநல்லூர் அருகே உள்ள தாதக்கவுண்டன்பட்டி கிராமத்தில் பூச்சி மேலாண்மைப் பயிற்சி நடைபெற்றது. சம்பங்கி தோட்டத்தில் செடிகளின் இலைக் குருத்துக்களுக்கு இடையில் தரைமட்டத்தில் மாவுப்பூச்சிகள் அதிகம் காணப்படுகிறது. செடிகளுக்கு மண் அணைக்காத தோட்டத்தில் செடிகளின் கிழங்குகளில் மாவுப்பூச்சி கூட்டம் கூட்டமாகக் காணப்படுகிறது. இப்பூச்சியின் உடலில் இருந்துவரும் தேன்போன்ற திரவம் சொட்டுச்சொட்டாக இலைகளின் மீது படியும். இதனால் இலைகளில் கரும்பூஞ்சாள படலம்தோன்றும். இது அதிகம் காணப்படும்போது செடியில் குருத்து அழுகி கருகிவிடும். அப்போது எறும்புகளின் நடமாட்டம் அதிகம் காணப்படும். எறும்பின் மூலம் மாவுப்பூச்சி தோட்டம் முழுவதும் பரவுகிறது. இதனையும் பிற பூச்சி இனங்களையும் ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்துவது தொடர்பான சிறப்பு பயிற்சி நடைபெற்றது.

மதுரை வேளாண். அறிவியல் மையத் தலைவர் இரா.வீரபுத்திரன், சம்பங்கித் தோட்டத்தின் உழவியல் தொழில் நுட்பங்கள், நீர், களை நிர்வாகம் குறித்து

விளக்கம் அளித்தார். முனைவர் அருண்குமார் சாகுபடி தொழில்நுட்பங்களை விளக்கினார். பூச்சயில்துறை பேராசிரியர் ஜெ.ஜெயராஜ், உதவிப்பேராசிரியை உஷாராணி ஆகியோர் சம்பங்கிப்பூவைத் தாக்கும் பூச்சிகளை, இயற்கைமுறையில் கட்டுப்படுத்த வேப்பெண்ணெய் 3 சதம், வேப்பங்கொட்டை 5 சதம் தயாரிப்பை செயல்விளக்கம் முலம் அளித்தனர்.

வேளாண்துறை அலுவலர்கள், கல்லூரி மாணவியரும் ஏராளமான விவசாயிகளும் இதில் கலந்துகொண்டனர்.

**பயறு வகைகளுக்கான விதை கிராமத் திட்டப் பயிற்சி**

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை அருகே புதுக்காமன்பட்டி கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் பயறுவகைகளுக்கான விதை கிராமத்திட்டப்பயிற்சி திங்கள்கிழமை நடைபெற்றது. இதில், திண்டுக்கல் வேளாண்மை இணை இயக்குநர் நா.சம்பத்குமார் தலைமை வகித்தார். பச்சைமலையான்கோட்டை ஊராட்சி தலைவர் நாகலெட்சுமி முன்னிலை வகித்தார்.

விதைச் சான்று அலுவலர் ஜெயச்சந்திரன், வேளாண்மை அலுவலர் ஆ.விஜயன், துணை வேளாண்மை அலுவலர் தண்டபாணி ஆகியோர் விவசாயிகளிடம் தொழில் நுட்பம் குறித்துப் பேசினர். பயறு வகைகளுக்கான விதை நேர்த்தி பற்றிய செயல்விளக்கத்தினை உதவி விதை அலுவலர்கள் சவரிமுத்து, பழனிச்சாமி, உதவி வேளாண்மை அலுவலர் பாண்டியம்மாள் ஆகியோர் செய்து காண்பித்தனர். இப்பயிற்சியில் அம்மா பண்ணை மகளிர் குழு உறுப்பினர்கள் மற்றும் சுற்று வட்டாரத்தைச் சார்ந்த பயறு சாகுபடி விவசாயிகள் என மொத்தம் 40 பேர் கலந்து கொண்டனர். பயிற்சி முடிவில் பயறுவகைக்கான வயலாய்வு மேற்கொள்ளப்பட்டு அசுவினி மற்றும் தத்துப்பூச்சி தாக்குதல்கள் அறியப்பட்டு அதற்கான தடுப்பு முறைகள் பற்றி விளக்கப்பட்டன. இப்பண்ணைப் பள்ளி வகுப்பிற்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட உதவி மேலாளர்கள் ஜெயசுப்ரமணி, சோபியாபிரேமா ஆகியோர் செய்திருந்தனர். நிகழ்ச்சியில் நிலக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் கா.முருகன் வரவேற்றார். அட்மா திட்ட மேலாளர் ஐ.சிங்கத்துரை நன்றி கூறினார்.

## 18-ஆம் கால்வாயில் தண்ணீர் திறப்பு

உத்தமபாளையம், போடி வட்டாரங்களில் உள்ள விவசாய நிலங்களின் பாசன பயன்பாட்டிற்காக திங்கள்கிழமை முல்லைப் பெரியாற்றில் இருந்து 18-ம் கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டது. லோயர்கேம்ப் அருகே முல்லைப் பெரியாற்றில் இருந்து 18 ஆம் கால்வாயில் வினாடிக்கு 279கன அடி வீதம் தண்ணீர் திறந்து வைத்து, ஆட்சியர் ந.வெங்கடாசலம் கூறியது: 18 ஆம் கால்வாயில் திறக்கப்பட்டுள்ள தண்ணீர் உத்தமபாளையம் வட்டாரத்திற்கு உள்பட்ட க.புதுப்பட்டி, அனுமந்தன்பட்டி, கோம்பை, தேவாரம், டி.சிந்தலைச்சேரி, கிருஷ்ணம்பட்டி, வெம்பக்கோட்டை, திம்மிநாயக்கன்பட்டி, பொட்டிபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள 29 கண்மாய்களில் நிரப்பப்பட்டு, 2,045.35 ஏக்கர் பரப்பளவில் உள்ள நிலங்கள் பயனடையும்.

போடி வட்டாரத்திற்கு உள்பட்ட டொம்புச்சேரி, மீனாட்சிபுரம், கோடங்கிபட்டி கிராமங்களில் உள்ள 15 கண்மாய்களில் நிரப்பப்பட்டு, 2,568.90 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்றார். முல்லைப் பெரியாற்றில் இருந்து 18-ம் கால்வாயில் தொடர்ந்து 9 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்படும் என்று பொதுப் பணித்துறை பொறியாளர்கள் கூறினர்.

## உத்தமபாளையம், தேனி பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு

உத்தமபாளையம் மற்றும் தேனி வட்டார விவசாய பாசனத்திற்காக முல்லைப் பெரியாற்றுக் கால்வாய் மதகினை மாவட்ட ஆட்சியர் ந.வெங்கடாசலம் தண்ணீர் திறந்தார். கம்பம் பள்ளத்தாக்கிலுள்ள உத்தமபாளையம் மற்றும் தேனி வட்டாரத்திலுள்ள 468 ஏக்கர் நன்செய் நிலத்திற்கும், 4678 ஏக்கர் புன்செய் நிலங்கள் பயன்பெறும் வகையில் பி.டி.ஆர் மற்றும் தந்தைப் பெரியார் கால்வாய் பாசனத்திட்டம் கொண்டுவரப்பட்டது. முல்லைப்பெரியாற்றுக் கால்வாயில் இருந்து இந்த கால்வாய்களுக்கு செப்டம்பர் முதல் வாரத்தில் தண்ணீர் திறப்பது வழக்கம். ஆனால் நவம்பர் இறுதி வரை தண்ணீர் திறந்து விடப்படாத நிலையில், அப்பகுதி விவசாயிகள் தண்ணீர் திறந்துவிட வலியுறுத்தி வந்தனர். இது குறித்து தினமணி நாளிதழில் செய்தி வெளியிட்டது.

தமிழ அரசு உத்தரவு: முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 138 அடியைக் கடந்த நிலையில் பி.டி.ஆர் மற்றும் தந்தை பெரியார் கால்வாயில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட தமிழக அரசு உத்தரவிட்டது. இதனை அடுத்து மாவட்ட ஆட்சியர் ந.வெங்கடாசலம் உத்தமபாளையத்தை அடுத்த ராமசாமி நாயக்கன்பட்டியில் உள்ள முல்லைப் பெரியாற்று கால்வாய் மதகிலிருந்து திங்கள்கிழமை தண்ணீர் திறந்துவிட்டார்.

இதன் மூலமாக வினாடிக்கு 100 கனஅடி விதம் 120 நாட்கள் தண்ணீர் பாயும். இதில் சின்னமனூர், சீலையம்பட்டி, வேப்பம்பட்டி, சீப்பாலக்கோட்டை, பூமலைக்குண்டு, தர்மாபுரி, தாடிச்சேரி, வெங்கடாசலம், கொடுவிலார்பட்டி, ஜங்கால்பட்டி,கோவிந்தநகரம் மற்றும் பாலகிருஷ்ணாபுரம் ஆகிய கிராமங்களிலுள்ள நஞ்செய் மற்றும் புஞ்செய் நிலங்கள் பயன்பெறும்.

இந்நிகழ்ச்சியில் உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் ராசையா,கம்பம் நகர் மன்றத் தலைவர் சிவக்குமார், சின்னமனூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் பாண்டியராஜன் உள்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**சண்முகாநதி அணையில் பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு**

சண்முகாநதி அணையில் இருந்து திங்கள்கிழமை பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

தேனி மாவட்டம் உத்தமபாளையம் அருகேயுள்ள இந்த அணையில் இருந்து பாசனத்திற்கான தண்ணீரை மாவட்ட ஆட்சியர் ந.வெங்கடாசலம் திறந்தார்.

பின்னர் அவர் கூறியது: சண்முகாநதி நீர் தேக்கத்தில் இருந்து ராயப்பன்பட்டி, மல்லிங்காபுரம், சின்னஓவுலாபுரம், எரசக்கநாயக்கனூர், கன்னிசேர்வைபட்டி, அழகாபுரி, வெள்ளையம்மாள்புரம், ஓடைப்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள 1,640 ஏக்கர் நிலங்களின் பாசனத்திற்காக வினாடிக்கு 14.47 கன அடி வீதம், 94 நாட்கள் தண்ணீர் திறக்கப்படும் என்றார். உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் ராஜய்யா, பொதுப் பணித்துறை செயற்பொறியாளர் சேகர், உதவி செயற்பொறியாளர் விஜிபாபு, மாவட்ட அதிமுக செயலர்

டி.டி.சிவக்குமார், ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் தீபாவளிராஜ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**சாத்தூர், சிவகாசியில் பரவலாக மழை**

சாத்தூர், சிவகாசியில் ஞாயிற்றுக்கிழமை பரவலாக மழை பெய்தது. இதனால் பல பகுதிகளில் மழைநீர் தேங்கியது. மழை காரணமாக சாத்தூர் பிரதான சாலை, புறவழிச் சாலை, மதுரை பேருந்து நிறுத்தம் உள்ளிட்ட பகுதிகளில் தண்ணீர் குளம்போல் தேங்கியுள்ளது. மேலும், சாத்தூரில் உள்ள திரையரங்கம் முன் உள்ள அணுகுசாலையிலும் தண்ணீர் தேங்கியுள்ளது. இதனால் வாகன ஓட்டிகள் அவதியடைந்தனர். சாத்தூரில் உள்ள திரையரங்கம் அருகே தண்ணீர் அதிகமாக தேங்கியுள்ளது. இப்பகுதியில் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன என நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிவகாசி:சிவகாசியில் ஞாயிற்றுக்கிழமை 41 மி.மீ. மழை பெய்துள்ளது. சாத்தூரில் 38 மி.மீ., ராஜபாளையத்தில் 22.6 மி.மீ.,வெம்பக்கோட்டை அணைப் பகுதியில் 45.8 மி.மீ., வத்திராயிருப்பில் 15 மி.மீ., ஸ்ரீவில்லிபுத்தூரில் 28 மி.மீ., பிளவக்கல் அணைப் பகுதியில் 23 மி.மீ., கோவிலாறு அணைப் பகுதியில் 24 மி.மீ. மழை பெய்துள்ளது.

**கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்**

பரமத்தி வேலூர் வட்டம், சேளூர் அருகே வடுகபாளையம்புதூரில் தமிழக அரசின் சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

முகாமை, சேளூர் ஊராட்சி மன்றத் தலைவர் கோவிந்தசாமி தொடக்கி வைத்தார். இதில், வடுகபாளையம்புதூர், சேளூர், செல்லப்பம்பாளையம், சுப்பையம்பாளையம், கந்தம்பாளையம், சாணார்பாளையம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் இருந்து வந்த கால்நடைகளுக்கு குடல்புழு நீக்கம், ஆண்மை நீக்கம், சினை பரிசோதனை, செயற்கைமுறை கருவூட்டல் உள்ளிட்ட சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. முகாமில், 149 பசுக்கள்,129 எருமைகள், 354 ஆடுகள், 214 கோழிகள், 23 நாய்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. இதைத்

தொடர்ந்து கன்றுகளின் பேரணி நடைபெற்றது. இதில், 2 பசு கன்றுகள், 2 எருமை கன்றுகள் தேர்வு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

முகாமில், வெங்கரை கால்நடை மருந்தக உதவி மருத்துவர் ராஜா, கலைச்செல்வி ஆகியோர் கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தனர்.

**டிச.7-இல் நிலக்கடலை சாகுபடி குறித்த பயிற்சி**

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் டிசம்பர் 7-ஆம் தேதி நிலக்கடலை, எள் சாகுபடி, விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் குறித்த இலவச பயிற்சி முகாம் நடைபெறுகிறது. இதுகுறித்து பயிற்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர் பி.மோகன் வெளியிட்ட செய்திக்குறிப்பு: இப் பயிற்சி முகாமில் நிலக்கடலை, எள் சாகுபடியின் முக்கியத்துவம், மண் பரிசோதனை செய்தல், நிலம் தயார் செய்தல், விதைத் தேர்வு செய்தல், விதை நேர்த்தி செய்தல், பயிர் இடைவெளி, விதைக்கும் முறைகள், உரமிடுதல், களை நிர்வாகம் செய்தல், பயிர்களுக்கு ஏற்ப களைக் கொல்லிகளைத் தேர்வு செய்தல், நீர் நிர்வாகம், சொட்டுநீர் பாசனம் அமைத்தல், ஒருங்கிணைந்த பூச்சி, நோய் நிர்வாகம், அறுவடைபின்சார் தொழில்நுட்பங்கள், கடலைகொடியைச் சேமிக்கும் முறைகள், தீவனமாகப் பயன்படுத்தும் தொழில்நுட்பங்கள் குறித்த ஒரு நாள் இலவச பயிற்சி நடத்தப்படுகிறது.

இதில், விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள், ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் வந்தோ அல்லது 04286 - 266345, 266244 என்ற தொலைபேசி எண் மூலமாகவோ வரும் டிசம்பர் 6-ஆம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்துகொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மேட்டூர் அணை நீர் மட்டம் 92 அடியை எட்டுகிறது**

மேட்டூர் அணையின் நீர் மட்டம் 92 அடியை எட்டுகிறது.

காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் பெய்துவரும் மழையின் காரணமாக, கடந்த இரண்டு வாரங்களாக பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 500 கனஅடியாக குறைக்கப்பட்டது. இந்நிலையில், காவிரியின் நீர்ப் பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கு தொடர்ந்து கணிசமான அளவில் நீர் வரத்து உள்ளது. இதனால், அணையின் நீர் மட்டம் வேகமாக உயரந்து வந்தது. தொடக்கத்தில் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டதால் அணையின் நீர்மட்டம் 60 அடியாக சரிந்த நிலையில், மழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து அணையின் நீர் மட்டம் 90 அடி வரை வேகமாக உயர்ந்தது.

தற்போது நீர்வரத்து சற்று குறைந்தாலும், பாசனத்துக்கு குறைந்த அளவில் தண்ணீர் திறப்பதால் அணையின் நீர் மட்டம் மெல்ல உயர்ந்து வருகிறது. ஞாயிற்றுக்கிழமை காலை 91.36 அடியாக இருந்த நீர் மட்டம், திங்கள்கிழமை காலை 91.70 அடியாக உயரந்து 92 அடியை நெருங்கி உள்ளது. திங்கள்கிழமை காலை மேட்டூர் அணைக்கு நொடிக்கு 5,750 கனஅடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கும், கிழக்குமேற்கு கால்வாய் பாசனத்துக்கும் நொடிக்கு 1000 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையின் நீர் இருப்பு 54.61 டி.எம்.சியாக உள்ளது.

**நாட்டுக்கோழி வளர்க்க நலத் திட்ட உதவி**

கரூரில் திங்கள்கிழமை நடைபெற்ற குறைதீர் கூட்டத்தில் நாட்டுக்கோழி வளர்க்கத் தேர்வு செய்யப்பட்ட 17 பயனாளிகளுக்கு ரூ. 6.47 லட்சத்திலான மானிய உதவிகளை மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி வழங்கினார்.

கூட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து இலவச வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களைப் பெற்று, அவற்றின்மீது உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டார்.

தொடர்ந்து கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில் நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டோருக்கு அரசின் மானிய நிதி வழங்கும்

நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் பேசியது: தமிழக முதல்வர் ஏழைகள் முன்னேற பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறார். குறிப்பாக வறுமை ஒழிப்புச்சங்கங்கள் மூலம் குழுக்கள் அமைத்து அவர்கள் சுயதொழில் தொடங்க நலத் திட்டங்கள் வழங்கப்படுகின்றன. அதனடிப்படையில் கிராமப்பகுதிகளில் விவசாயப் பணிகளை அதிகளவில் மேற்கொண்டு வரும் பெண்களுக்கு மேலும் வருமானம் கிடைக்க இணைத்தொழிலாகத் தொடங்கப்பட்ட நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டம் நான்கு ஆண்டுகளாகச் சிறப்பாகச் செயல்படுகிறது.

ஆண்டுதோறும் நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டத்தில் பயனாளிகளுக்கு கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில் பயிற்சி வழங்கி, வங்கிகள் மூலம் அரசு மானிய திட்டத்தில் நாட்டுக்கோழி வளர்ப்புக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கோழிகள் வழங்கப்படுகின்றன. இதன் நோக்கம் பெண்கள் சுயதொழில் மேற்கொள்ள அதிக ஆர்வம் காட்ட வேண்டும் என்பதே.

கரூர் மாவட்டத்தில் 2015-16-ம் ஆண்டிற்கு 160 பயனாளிகளுக்கு ரூ. 51.80 லட்சத்தில் 160 யூனிட்கள் (1 யூனிட்டுக்கு 250 கோழிகள்) வழங்கத் திட்டமிட்டு அதற்குரிய பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு பயிற்சி வழங்கி முதல் கட்டமாக 16 பேருக்கு மானியம் வழங்கப்பட்டு கோழிகளை வளர்த்து வருகிறார்கள். தொடர்ந்து 2-ம் கட்டமாக தற்போது 17 பேருக்கு அரசு மானியமாக தலா ரூ.32,375 வீதம் 20 யூனிட்டுகளுக்கு (அலகுகள்) ரூ.6,47,500-க்கான தமிழக அரசின் மானிய நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது என்றார் அவர். நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மு. அருணா, கரூர் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் பழனிவேல், உதவி இயக்குநர் மு. ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**விசுவநாதபுரியில் கால்நடை மருத்துவ முகாம்**

க. பரமத்தி ஒன்றியம் விசுவநாதபுரி மாரியம்மன் கோவில் அருகே பவித்திரம் கால்நடை மருந்தகம் சார்பில் சிறப்பு கால்நடை பாதுகாப்புத் திட்ட மருத்துவ முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது. மண்டலத் துணை இயக்குநர் கதிர்வேல் தலைமை வகித்தார். கரூர் கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர்கள் ராஜேந்திரன், நோய் புலனாய்வு அலுவலர் முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மண்டல இணை இயக்குநர் பழனிவேல் தொடங்கி வைத்தார்.

முகாமில் கால்நடை மருத்துவர்கள் சின்னதாராபுரம் மோகன்ராஜ், நோய் புலனாய்வு மருத்துவர் சுதா உள்ளிட்டோர் பங்கேற்று, கால்நடைகளுக்கு நோய் தடுப்பூசி, குடற்புழு நீக்கம், ஆண்மை நீக்கம், செயற்கைக் கருவூட்டல், சினைப் பரிசோதனை, கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல், ஆடுகளுக்கு துள்ளுமாரி நோய், நாய்களுக்கு வெறிநாய் தடுப்பூசிகளைப் போட்டனர். சினை பிடிக்காத கால்நடைகளுக்கு தாது உப்புக் கலவை வழங்கப்பட்டது. மேலும் சிறந்த கலப்பின கிடேரிகளை வளர்த்த விவசாயிகள் 4 பேருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. கால்நடை மருத்துவர் தமிழரசன் வரவேற்றார். கால்நடை மருத்துவர் மோகன்ராஜ் நன்றி கூறினார்.

**பலத்த மழை: தஞ்சை மாவட்டத்தில் 205 ஹெக்டேர் பயிர்கள் நீரில் மூழ்கின**

தஞ்சாவூர் மாவட்டத்தில் பெய்த பலத்த மழையின் காரணமாக 205 ஹெக்டேரில் பயிரிடப்பட்டிருந்த சம்பா, தாளடி பருவ நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் பலத்த மழை பெய்யத் தொடங்கி, திங்கள்கிழமை காலை வரை நீடித்தது.

மாவட்டத்தில் கடந்த வாரம் பெய்த பலத்த மழையால் 532 ஹெக்டேர் சம்பா, தாளடி பருவ நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. இவற்றில் 196 ஹெக்டேரில் தண்ணீர் வடியாமல் இருந்ததால் பயிர்கள் மூழ்கியே இருந்தன.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் முதல் தொடர்ந்து பெய்த பலத்த மழையால் ஏற்கெனவே தண்ணீரில் மூழ்கியிருந்த பயிர்களையும் சேர்த்து மொத்தம் 205 ஹெக்டேரில் சம்பா, தாளடி பருவ நெல் பயிர்கள் நீரில் மூழ்கின.

இதில், அதிகபட்சமாக திருவையாறு வட்டாரத்தில் 80 ஹெக்டேரிலும், அடுத்து ஒரத்தநாடு வட்டாரத்தில் 46 ஹெக்டேரிலும், பூதலூர் வட்டாரத்தில் 35 ஹெக்டேரிலும், கும்பகோணம் வட்டாரத்தில் 15 ஹெக்டேரிலும், திருவிடைமருதூர் வட்டாரத்தில் 13.2 ஹெக்டேரிலும், பட்டுக்கோட்டை வட்டாரத்தில் 7.2 ஹெக்டேரிலும், பாபநாசம் வட்டாரத்தில் 6.6 ஹெக்டேரிலும், பேராவூரணி வட்டாரத்தில் 2 ஹெக்டேரிலும் நீரில் மூழ்கியுள்ளன.

9 கால்நடைகள் இறப்பு: ஞாயிற்றுக்கிழமை பெய்த பலத்த மழையால் 8 ஆடுகளும், ஒரு பசு மாடும் இறந்தன. 5 வீடுகள் இடிந்து சேதமடைந்தன. மாவட்டத்தில் மழையால் இதுவரை 109 ஆடுகளும், 54 பசுக்களும் இறந்துள்ளன. இதேபோல, இதுவரை 623 வீடுகள் பகுதியாகவும், 46 வீடுகள் முழுமையாகவும் இடிந்து சேதமாகின.

**பெரம்பலூர் மாவட்டத்தில் பலத்த மழை**

பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த 2 நாள்களாக பெய்த மழையால் பெரும்பாலான இடங்களில் சாலைகள் சேதமடைந்தன.

மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இரவு 8 மணிக்கு தொடங்கிய மழை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சுமார் 1 மணி நேரம் பரவலாக மழை பெய்தது. அதைத் தொடர்ந்து, இரவு முழுவதும் பலத்த மழை பெய்தது.

இந்த மழையால், வரத்து வாய்க்கால்களிலும், சாலையோரங்களிலும் மழைநீர் பெருக்கெடுத்தது. ஏரிகள் மற்றும் குளங்களுக்கும் நீர்வரத்து அதிகரித்துள்ளது. பச்சமலை பகுதிகளில் பெய்த பலத்த மழையால் கல்லாற்றில் திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதன்படி, திங்கள்கிழமை காலை 8 மணி வரை பெரம்பலூர்- 53 மி.மீட்டர், செட்டிக்குளம்- 31 மி.மீட்டர், வேப்பந்தட்டை- 20 மி.மீட்டர், தழுதாழை- 18 மி.மீட்டர், பாடாலூர்- 34 மி.மீட்டர் என மொத்தம் 156 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

சாலைகள் சேதம்: பெரம்பலூர் மாவட்டத்திலும், நகரின் பெரும்பாலான பகுதிகளிலும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், பெரும்பாலான சாலைகள் சேதமடைந்துள்ளன. குறிப்பாக, பழைய மற்றும் புறநகர் பேருந்து நிலையம், சங்குப்பேட்டை, பாலக்கரை, ஆட்சியர் அலுவலக சாலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும், கிராமப்புறங்களில் உள்ள சாலைகளிலும் மழை நீர் தேங்கி, குட்டை போன்றும் சேறும், சகதியுமாகவும் காட்சி அளிக்கின்றன. சாலைகளில் பெரிய அளவிலான பள்ளங்களில் நீர் நிரம்பியிருப்பதால், பள்ளம் இருப்பதை அறியாமல் செல்லும் வாகன ஓட்டிகள் தவறி விழுந்து காயமடைகின்றனர். இதனால், சேதமடைந்த சாலைகளை போர்க்கால

அடிப்படையில் சீரமைக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**கொடைக்கானல் பகுதியில் பலத்த மழை: பழைய அணை, தடுப்பணை நிரம்பியது**

கொடைக்கானல் பகுதியில் நேற்று பெய்த பலத்த மழை காரணமாக பழைய அணை, தடுப்பணை நிரம்பியது. பலத்த மழைதிண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் கடந்த ஒரு வார காலமாகவே கன மழை பெய்தது. இதன் காரணமாக கொடைக்கானல் நகருக்கு குடிநீர் வழங்குவதில் முக்கிய பங்காற்றும் மனோரஞ்சிதம் அணை அதன் முழு கொள்ளளவை எட்டியது. மேலும் அணையில் இருந்து உபரி நீர் மறுகால் வழியாக வெளியேறிக்கொண்டிருக்கிறது. இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை நேரத்தில் சாரல் மழை பெய்தது. பின்னர் இரவு 10 மணி முதல் அதிகாலை 5 மணி வரை பலத்த மழை பெய்தது. இதில் அப்சர்வேட்டரி பகுதியில் 50 மில்லி மீட்டர் மழையும், போட்கிளப் பகுதியில் 48 மில்லி மீட்டர் மழையும் பதிவானது.

மேலும் 2 அணைகள் நிரம்பின இதன் காரணமாக கொடைக்கானல் பழைய அணை நிரம்பி, அணையில் இருந்து உபரி நீர் வெளியேறுகிறது. இதே போல் மனோரஞ்சிதம் அணை, பழைய அணைக்கு நடுவே அமைக்கப்பட்ட தடுப்பணையும் அதன் முழு கொள்ளளவை எட்டியுள்ளது. நிரம்பி வழியும் 3 அணைகளையும் கொடைக்கானல் நகரசபை தலைவர் ஸ்ரீதர், துணை தலைவர் எட்வர்டு, ஆணையாளர் சரவணக்குமார் மற்றும் அதிகாரிகள் பார்வையிட்டனர். அப்போது இன்னும் ஒரு ஆண்டிற்கு கொடைக்கானலில் குடிநீர் பிரச்சினை இருக்காது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். பலத்த மழை காரணமாக வெள்ளி நீர்வீழ்ச்சி, பாம்பார் நீர்வீழ்ச்சிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. நட்சத்திர ஏரியும் நிரம்பி தண்ணீர் மறுகால் பாய்கிறது. நேற்று முன்தினம் நள்ளிரவில் கொடைக்கானல்-வத்தலக்குண்டு சாலையில் வனத்து

சின்னப்பர் குருசடி அருகே மரம் ஒன்று வேரோடு சாய்ந்தது. அதனை அந்த வழியாக வாகனங்களில் வந்தவர்கள் வெட்டி அகற்றினர்.

## நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 5 காசுகள் உயர்வு 365 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை நேற்று முன்தினம் 360 காசுகளாக இருந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை விலையை 5 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 365 காசுகளாக உயர்ந்து உள்ளது. பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:- சென்னை-380, ஐதராபாத்-360, விஜயவாடா, தனுகு-352, பார்வாலா-372, மும்பை-398, மைசூரு-378, பெங்களூரு-380, கொல்கத்தா-387,டெல்லி-385. கறிக்கோழி கிலோ ரூ.56-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையில் நேற்று பல்லடத்தில் நடந்த கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.2 குறைக்க முடிவு செய்தனர். எனவே கறிக்கோழி விலை கிலோ ரூ.54 ஆக குறைந்து உள்ளது. முட்டைக்கோழி கிலோ ரூ.54-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதன் விலையில் மாற்றம் செய்யப் படவில்லை.

## இயற்கை உரங்கள் மூலம் தேயிலை சாகுபடி மேற்கொள்ள நடவடிக்கை தோட்டக்கலைத்துறை இணை இயக்குனர் தகவல்



ஊட்டி, இயற்கை உரங்கள் மூலம் தேயிலை சாகுபடி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தோட்டக்கலைத்துறை இணை இயக்குனர் டாக்டர் ராம்சுந்தர் தெரிவித்து உள்ளார். கருத்தரங்கு ஊட்டியில் இயற்கை உரங்கள் மூலம் விவசாயம் செய்வது குறித்த கருத்தரங்கு நேற்று நடைபெற்றது. கருத்தரங்கிற்கு விஞ்ஞானி டாக்டர் பெருமாள் தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

தற்போது உலகம் முழுவதும் ரசாயன உரங்களை பயன்படுத்தி காய்கறிகள் விளைவிக்கப்படுகிறது. இதனால் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு வருகின்றன. மேலும் ரசாயன உரங்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் விவசாய பொருட்களுக்கு நல்ல விலை கிடைப்பது இல்லை. எனவே தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகளை இயற்கை வேளாண்மை திட்டத்தின் கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இயற்கை உரங்கள் மூலம் தேயிலை சாகுபடி நீலகிரியில் உள்ள கிராமங்களில் உள்ள பெண்கள் இளம் தேயிலை கொழுந்துகளை வைத்து கிரீன் டீ உற்பத்தி செய்கின்றனர். இதற்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. இதேப்போல் ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவற்றை பயன்படுத்தாமல் இயற்கை உரங்கள் மூலம் தயாரிக்கப்படும் கிரீன் டீக்கு இதை விட நல்ல விலை கிடைக்கும். மருத்துவ குணம் வாய்ந்த பழங்கள், காய்கறிகள் உற்பத்தி செய்தால் அவற்றுக்கு நல்ல விலை கிடைக்கும். எனவே இதுகுறித்து விவசாயிகள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்ந்து தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் டாக்டர் ராம்சுந்தர் பேசும் போது, நீலகிரி மாவட்டத்தில் இயற்கையை பாதுகாக்கும் நோக்கத்தில் இயற்கை தேயிலை சாகுபடி திட்டம் உருவாக்கப்பட்டு உள்ளது. முதற்கட்டமாக எடக்காடு மற்றும் கக்குளா ஆகிய கிராமங்களில் 250 ஏக்கர் பரப்பளவில் இயற்கை உரங்கள் மூலம் தேயிலை சாகுபடி செய்யப்பட்டு, தேயிலை தூள் தயாரிக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இதற்கு தமிழக அரசு மானியம் வழங்கி வருகிறது என்று கூறினார்.

கீரைகள் கருத்தரங்கில் தோட்டக்கலை ஆராய்ச்சி மைய முதன்மை விஞ்ஞானி

செல்வராஜ் மற்றும் ஸ்வீடன் நாட்டு விஞ்ஞானி ஜோய்டின், மகேஷ் உள்பட பல்வேறு நாடுகளை சேர்ந்த இயற்கை விஞ்ஞானிகள், வேளாண்மை மாணவ-மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

மேலும் கருத்தரங்கில் இயற்கை உரங்கள் மூலம் விளைவிக்கப்பட்ட முள்ளங்கி, அத்திப்பழம், அஸ்பரஸ் மற்றும் பல்வேறு வகையான கீரைகள் கண்காட்சியில் வைக்கப்பட்டு இருந்தன. இதனை வெளிநாட்டு பயணிகள் உள்பட பலர் பார்வை யிட்டனர்.

**முல்லைப்பெரியாறு அணையில் மூவர் கண்காணிப்பு குழு தலைவர் முன்னிலையில் மதகை இயக்கி சோதனை நல்ல நிலையில் இருப்பது உறுதி செய்யப்பட்டது**

முல்லைப்பெரியாறு அணையில் மூவர் கண்காணிப்பு குழு தலைவர் முன்னிலையில் மதகை இயக்கி சோதனை செய்யப்பட்டது. அப்போது மதகு நல்ல நிலையில் இருப்பது உறுதி செய்யப்பட்டது. கண்காணிப்பு குழு

முல்லைப்பெரியாறு அணை தமிழக-கேரள மாநில எல்லையில் அமைந்து உள்ளது. இந்த அணையின் நீர்மட்டம் 152 அடியில் இருந்து கடந்த 1979-ம் ஆண்டு 136 அடியாக குறைக்கப்பட்டது. உச்சநீதிமன்ற தீர்ப்பை தொடர்ந்து, கடந்த ஆண்டு அணையின் நீர்மட்டம் 136 அடியில் இருந்து 142 அடியாக உயர்த்தப்பட்டது.

இந்த நீர்மட்டத்தை உயர்த்தும் பணியை கண்காணிக்கவும், அணையில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கவும் உச்சநீதிமன்றம் உத்தரவுப்படி 3 பேர் கொண்ட கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டது. இந்த மூவர் கண்காணிப்பு குழுவுக்கு உதவியாக துணை கண்காணிப்பு குழுவும் அமைக்கப்பட்டது. இந்த கண்காணிப்பு குழுவினர் அணையில் அவ்வப்போது ஆய்வு செய்து வருகின்றனர். மூவர் கண்காணிப்பு குழுவினர் கடைசியாக கடந்த ஜூன் மாதம் 22-ந்தேதி அணையில் ஆய்வு செய்தனர். அதன்பிறகு, துணை கண்காணிப்பு குழுவினர் அவ்வப்போது ஆணையில் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்து

வந்தனர். இந்த நிலையில், வடகிழக்கு பருவமழைக் காலம் தொடங்கி தொடர்ந்து மழை பெய்ததால் அணையின் நீர்மட்டம் உயர்ந்தது.

அணையில் ஆய்வு இதையடுத்து மூவர் கண்காணிப்பு குழுவினர் முல்லைப்பெரியாறு அணையில் நேற்று ஆய்வு செய்தனர். இதற்காக கண்காணிப்பு குழுவின் தலைவரான மத்திய நீர்வள ஆணையத்தின் தலைமை பொறியாளர் எல்.ஏ.வி.நாதன், தமிழக அரசின் பிரதிநிதியான தமிழ்நாடு பொதுப்பணித்துறை முதன்மை செயலாளர் என்.எஸ்.பழனியப்பன் மற்றும் தமிழக அதிகாரிகள் காலை 11.15 மணியளவில் தேக்கடியில் இருந்து படகு மூலமாக புறப்பட்டு, பகல் 12.10 மணியளவில் அணைக்கு சென்றனர்.

மூவர் குழுவின் தலைவர் தலைமையில் அணையில் ஆய்வை தொடங்கிய, அரை மணி நேரத்திற்கு பிறகு கேரள அரசின் பிரதிநிதியான நீர்ப்பாசனத்துறை கூடுதல் தலைமை செயலாளர் வி.ஜே.குரியன் தலைமையில் கேரள அதிகாரிகள் அணைக்கு வந்து ஆய்வில் பங்கேற்றனர். இதையடுத்து பேபி அணை, முல்லைப்பெரியாறு அணையின் கேளரி பகுதிக்கு மூவர் கண்காணிப்பு குழுவினர் சென்று ஆய்வு நடத்தினர். கேளரி பகுதியில் கசிவுநீர் அளவை கணக்கிட்டு சுமார் 1 மணி நேரம் ஆய்வு மேற்கொண்டனர். மதகை இயக்கி சோதனை அதன்பிறகு ஆய்வை முடித்துக் கொண்டு கண்காணிப்பு குழுவின் தலைவர் புறப்பட முயன்றார். ஆனால், கேரள மாநில பிரதிநிதியான வி.ஜே.குரியன் மற்றும் துணை கண்காணிப்பு குழுவில் உள்ள கேரள மாநில பிரதிநிதிகள் சேர்ந்து மதகுகளை இயக்கி சோதித்து பார்க்க வேண்டும் என்று கூறி மதகு பகுதிக்கு சென்றனர். இதனால், கண்காணிப்பு குழு தலைவரும் மதகு பகுதிக்கு சென்று ஆய்வு செய்தார்.

மதகுகள் நல்ல நிலையில் இருப்பதால், அதனை மீண்டும் சோதித்துப் பார்க்கத் தேவையில்லை என்று கூறி மதகுகளை ஆய்வு செய்வதற்கு தமிழக பிரதிநிதியான என்.எஸ்.பழனியப்பன் செல்லவில்லை. துணை கண்காணிப்பு குழுவில் உள்ள தமிழக பிரதிநிதிகள் மட்டும் மதகு பகுதிக்கு சென்று மதகுகள் நல்ல நிலையில் இருப்பதை உறுதி செய்யும் வகையில் ஏற்கனவே சோதித்து பார்க்கப்பட்டுள்ள விவரங்கள் அடங்கிய பதிவேடுகளை காண்பித்தனர். இதனை பார்த்த கண்காணிப்பு குழு தலைவர், மதகுகள் நல்ல நிலையில்

இருப்பது உறுதி செய்யப்பட்டு உள்ளதால் சோதித்துப் பார்க்க தேவையில்லை என்றார்.

ஆனால், கேரள பிரதிநிதி வி.ஜே.குரியன் மற்றும் கேரள அதிகாரிகள், மதகுகளை கட்டாயம் சோதித்துப் பார்க்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தினர். இதனை தொடர்ந்து முதலாவது மதகை சோதித்துப் பார்க்க கண்காணிப்பு குழு தலைவர் அனுமதி அளித்தார். அதன்பேரில், ஜெனரேட்டர் இயக்கப்பட்டு பிற்பகல் 1.55 மணியளவில் முதலாவது மதகு சுமார் 1½ நிமிடம் ஏற்றி, இறக்கி தண்ணீரை வெளியேற்றி பரிசோதித்துப் பார்க்கப்பட்டது.

நல்ல நிலையில் உள்ளது இதனை ஆய்வு செய்த கண்காணிப்பு குழு தலைவர், மதகுகள் நல்ல நிலையில் இருப்பது உறுதி செய்யப்பட்டு உள்ளதாக கூறினார். இதையடுத்து கண்காணிப்பு குழுவினர் ஆய்வை முடித்துக் கொண்டு தேக்கடிக்கு திரும்பி வந்தனர். இந்த ஆய்வின் மூலம் மூவர் கண்காணிப்பு குழு மற்றும் துணை கண்காணிப்பு குழுவில் இடம் பெற்றுள்ள கேரள மாநில பிரதிநிதிகளின் கோரிக்கை நிவர்த்தி செய்யப்பட்டு உள்ளதோடு, மதகுகள் நல்ல நிலையில் இருப்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

**கூடலூர் 18-ம் கால்வாயில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் கலெக்டர் வெங்கடாசலம் திறந்து வைத்தார்**

கூடலூர் 18-ம் கால்வாயில் இருந்து பாசனத்திற்காக தண்ணீரை கலெக்டர் வெங்கடாசலம் திறந்து வைத்தார். 18-ம் கால்வாய்
தேனி மாவட்டம் தேவாரம், போடி பகுதிகளில் உள்ள வறட்சியான நிலங்களுக்கு பாசன வசதியை ஏற்படுத்தி தர வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று கடந்த 1998-ம் ஆண்டு 18-ம் கால்வாய் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இதையொட்டி ரூ.33 கோடியே 55 லட்சம் மதிப்பில் இந்த திட்டப்பணிகள் தொடங்கப்பட்டு கடந்த 2008-ம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.

இந்த திட்டத்தின்படி 18-ம் கால்வாய் தலைமதகு கூடலூர் அருகே உள்ள முல்லைப்பெரியாற்றின் குறுக்கே வைரவனார் அணைக்கு மேல்பகுதியில்

கட்டப்பட்டது. பின்னர் இங்கிருந்து 41 கிலோ மீட்டர் தூரத்திற்கு கால்வாய் வெட்டப்பட்டது. இதன் மூலம் தேவாரம், சின்னதேவிகுளம், டொம்புச்சேரி கண்மாய்கள் நிரம்பி 4 ஆயிரத்து 614.25 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. தண்ணீர் திறப்பு

இந்த திட்டத்தினால் 13 கிராமங்களில் உள்ள 44 கண்மாய்கள் பயன்பெற்று வருகிறது. இதையொட்டி 18-ம் கால்வாயில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிட தமிழக அரசு உத்தரவிட்டது. இதனைத் தொடர்ந்து நேற்று கால்வாயில் இருந்து தண்ணீர் திறந்து விடும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு தேனி மாவட்ட கலெக்டர் வெங்கடாசலம் தலைமை தாங்கி மதகை இயக்கி தண்ணீரை திறந்து வைத்தார். 18-ம் கால்வாயில் இருந்து 279 கனஅடி வீதம் 9 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. முல்லைப்பெரியார் அணையின் தண்ணீர் இருப்பை பொறுத்து கால்வாயில் தண்ணீர் திறக்கப்படும் நாட்கள் முடிவு செய்யப்படும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஒத்துழைப்பு மேலும் விவசாயிகள் அனைவரும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும், பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு விவசாயிகள் முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்றும் கலெக்டர் வெங்கடாசலம் கேட்டுக் கொண்டுள்ளார். நிகழ்ச்சியில் அ.தி.மு.க. மாவட்ட செயலாளர் சிவக்குமார், கூடலூர் நகரசபை தலைவர் அருண்குமார், மஞ்சளாறு வடிநிலவட்ட செயற்பொறியாளர் சேகர், உதவி செயற்பொறியாளர்கள் புச்சிபாபு, செல்வம் மற்றும் விவசாயிகள் சங்க நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**அந்தமான் அருகே உள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக மேலும் 4 நாட்கள் மழை நீடிக்கும்; கடலோர மாவட்டங்களில் 2 நாட்கள் கன மழைக்கு வாய்ப்பு**

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது.

<u>தமிழகம் முழுவதும் மழை</u>

வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்தம் அடுத்தடுத்து உருவாகியதால் தமிழகம் முழுவதும் பலத்த மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு கனமழை

பெய்ததால் சென்னை, திருவள்ளூர், காஞ்சீபுரம் உள்ளிட்ட 14 மாவட்டங்களில் பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டது.

நேற்று, சென்னை புறநகர் பகுதிகளான செங்குன்றம், மாதவரம், புழல், கொளத்தூர், ராஜாமங்கலம் வில்லிவாக்கம் ஆகிய பகுதிகளில் பகல் 2 மணி வரை வெயில் அடித்தது. பின்னர் காற்றுடன் பலத்த மழை கொட்டியது. மழை காரணமாக செங்குன்றத்தில் 2 மணி நேரம் மின்சாரம் தடைபட்டது.

பூந்தமல்லி அடுத்த மாங்காடு, குன்றத்தூர், போரூர், மதுரவாயல் ஆகிய பகுதிகளில் மதியம் முதல் லேசான மழை பெய்தது.

ஆலந்தூர் மற்றும் சுற்று வட்டார பகுதியைச் சேர்ந்த பரங்கிமலை, மேடவாக்கம், பள்ளிக்கரணை, பெருங்குடி, ஆகிய பகுதிகளில் காலை முதல் விட்டு, விட்டு மழை கொட்டியது. இதே போல் தமிழகம் முழுவதும் பல இடங்களில் நேற்று மழை பெய்தது.

<u>மேலும் நீடிக்கும்</u>

இந்தநிலையில் வங்கக்கடலில் உள்ள குறைந்த காற்றழுத்தம் காரணமாக மேலும் 4 நாட்களுக்கு மழை நீடிக்கும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:–

<u>கடலோர மாவட்டங்களில் மிக கனமழை</u>

இலங்கை அருகே இருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை மறைந்துவிட்டது. வங்க கடலில் அந்தமான் அருகே தென் கிழக்கு பகுதியில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை மேற்கு நோக்கி நகர்ந்து தென் மேற்கு வங்க கடலில் நிலைகொண்டுள்ளது. இது மெதுவாகத்தான் நகரும்.

இந்த நிகழ்வு காரணமாக தமிழ்நாட்டில் அனேக இடங்களில் மழை

பெய்துள்ளது. அதிகபட்சமாக குடவாசலில் 12 செ.மீ. மழை பெய்துள்ளது. இன்றும் (செவ்வாய்க்கிழமை), நாளையும் (புதன்கிழமை) கடலோர மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்யும்.

கடலோர மாவட்டங்களில் சில இடங்களில் கன மழை முதல் மிக கனமழை வரை பெய்யும். உள்மாவட்டங்களில் மழை பெய்யும். ஓரிரு இடங்களில் கனமழை பெய்யும். சென்னையில் விட்டு விட்டு மழை பெய்யும். சில நேரங்களில் கனமழை பெய்யும்.

<u>சென்னையில் 8–ந் தேதி வரை மழை</u>

மொத்தத்தில் தமிழ்நாட்டில் 4 நாட்களுக்கு பரவலாக மழை பெய்யும். அடுத்த 24 மணி நேரத்தையும் சேர்த்தால் 5 நாட்களுக்கு மழை உண்டு. அடுத்த 24 மணி நேரம் என்பது நேற்று காலை 8.30 மணி முதல் இன்று காலை 8.30 மணி வரையாகும். சென்னையில் 8–ந் தேதி வரை மழை உள்ளது.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை காலத்தில் பெய்ய வேண்டிய சராசரி மழை அளவு 44 செ.மீ., ஆனால் இதுவரையில் பெய்த மழை அளவு 52 செ.மீ. அதாவது வடகிழக்கு பருவமழை காலம் டிசம்பர் 31–ந் தேதி வரை உள்ளது. இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:–

<u>மழை அளவு</u>

குடவாசல் 12 செ.மீ., மரக்காணம் 10 செ.மீ., வானூர், திருப்புவனம், விழுப்புரம், மணமேல்குடி தலா 9 செ.மீ., தஞ்சை, ஆயிக்குடி, திருவாரூர், திருமானூர், பாபநாசம் (தஞ்சாவூர் மாவட்டம்) தலா 8 செ.மீ., அரியலூர், குன்னூர், தென்காசி, ராமநாதபுரம், திருவாடனை, பாபநாசம் (திருநெல்வேலி மாவட்டம்) காரைக்குடி, வலங்கைமான், ஜெயங்கொண்டம் தலா 7 செ.மீ., புழல், செந்துறை, நன்னிலம், வேடச்சந்தூர், கோவில்பட்டி, அரவாக்குறிச்சி,

அறந்தாங்கி, ஜெயங்கொண்டம் தலா 6 செ.மீ. மழை பெய்துள்ளது. மேலும் 200–க்கும் மேற்பட்ட இடங்களில் மழை அளவு பதிவாகி உள்ளது.

தி இந்து

தமிழால் இணைவோம்

தமிழகத்தில் 8 நாட்களுக்கு மழை நீடிக்கும்: வானிலை ஆய்வு மையம் தகவல்



வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு நிலை நீடிப்பு

தென்மேற்கு வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலையால் தமிழகத்தில் 5 நாட்களுக்கு கனமழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதைத் தொடர்ந்து 3 நாட்களுக்கு மிதமான மழை பெய்யும் என்று கூறப்படுகிறது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. இதற்கிடையே, வங்கக்கடலில் தொடர்ந்து உருவாகி வரும் காற்றழுத்த தாழ்வு நிலைகளால் மாநிலம் முழுவதும் பரவலாக கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக, வட கடலோர மாவட்டங்களில் கனமழையால் கடும் சேதம் ஏற்பட்டுள்ளது. நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களும் மழையால் பாதிக்கப்பட்டுள்ளன.

மழை பாதிப்புகளில் இருந்து மக்கள் இன்னும் முழுமையாக மீளாத நிலையில், வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை ஏற்பட்டுள்ளதால் பல மாவட்டங் களில் மீண்டும் கனமழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் நிலவரப்படி வங்கக்கடலில் 2 காற்றழுத்த தாழ்வு நிலைகள் நிலைகொண்டிருந்தன. இவற்றின் காரணமாக பெரும்பாலான இடங்களில் மழை பெய்து வருகிறது. இந்த மழை 5 நாட்களுக்கு நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது: தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் இலங்கை அருகில் நிலைகொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை மறைந்து விட்டது. ஆனால், தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் தெற்கு அந்தமான் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை உருவான காற்றழுத்த தாழ்வு நிலை, மேற்கு நோக்கி நகர்ந்து, தற்போது தென்மேற்கு வங்கக்கடலில் நீடிக்கிறது. இது மிகவும் மெதுவாக நகர்ந்து இலங்கை அருகில் சென்று தொடர்ந்து அரபிக்கடல் பகுதியில் சென்றுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காற்றழுத்த தாழ்வு நிலை மிகவும் மெதுவாக நகர்ந்து வருவதால், தமிழகத்தில் மழை பெய்து வருகிறது. திங்கள்கிழமை காலை வரையான 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக குடவாசலில் 12 செ.மீ. மழை பெய்துள்ளது. மரக்காணத்தில் 10, வானூர், திருபுவனம், விழுப்புரம், மணமேல்குடியில் 9 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

அடுத்த 3 நாட்களுக்கு கடலோர மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும், உள்மாவட்டங்களில் அனேக இடங்களிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை அல்லது மிக கனமழையும், உள்மாவட்டங்களில் கனமழையும் பெய்யக்கூடும். அதன்பிறகு 2 நாட்களுக்கு அனேக இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. பின்னர் படிப்படியாக மழை குறையலாம்.

சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரில் விட்டுவிட்டு மழை பெய்யும். சில நேரங்களில் கனமழையும் பெய்யலாம். தற்போது வங்கக்கடலில் நிலவிவரும் காற்றழுத்த தாழ்வு நிலை, தாழ்வு பகுதியாகவோ மண்டலமாகவோ மாறுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. இதனால், வடதமிழக பகுதிகளில் 3 நாட்களுக்கு அதிகளவு மழை கிடைக்கும். டெல்டா மாவட்டங்கள் மற்றும் தென் மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்புள்ளது.

இந்த வடகிழக்கு பருவமழை காலத்தில் இதுவரை 52 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. சென்னையில் மட்டும் 114 செ.மீ. மழை பெய்துள்ளது.

இவ்வாறு ரமணன் கூறினார்.

**5 நாட்களுக்கு கனமழை**

காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தில் 8 நாட்களுக்கு மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. முதல் 5 நாளில் பரவலாக கனமழையும், அடுத்த 3 நாட்களுக்கு மிதமான மழையும் பெய்யும். அதன்பின் மழை குறையும் என கூறப்படுகிறது.

இந்நிலையில், நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் சென்னை, திருவள்ளூர் உட்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. நேற்று மாலை நிலவரப்படி, சென்னை நுங்கம்பாக்கத்தில் 6.4 மி.மீ,, மீனம்பாக்கத்தில் 11 மி.மீ. மழை பதிவாகியது. விழுப்புரம், கடலூர், வேலூர் மாவட்டம் குடியாத்தம், திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லியில் மிக அதிகமான மழை பதிவாகியிருந்தது.

**துல்லிய கணிப்பு**

வங்கக்கடல் பகுதியில் ஏற்படும் வானிலை நிகழ்வுகள் அடிப்படையில் அதன்போக்கை அறிந்து மழை பெய்யும் பகுதிகளை வானிலை ஆய்வு மையம் கணிக்கிறது. சில நேரங்களில் இந்த கணிப்புகள் இயற்கையின் திடீர் மாற்றங்களால் தவறி விடுவதுண்டு. பொதுவாக, பூகோள அமைப்பு வெப்ப மண்டலப் பகுதிகள், புற வெப்பமண்டலப் பகுதிகள் என பிரிக்கப்படுகிறது.

இதில், புற வெப்பமண்டல பகுதிகளில் நிலவும் மாற்றங்களை கணினி துல்லியமாக கணிப்பதாக கூறப்படுகிறது. வெப்பமண்டல பகுதியில் தமிழகம் வருவதால், துல்லிய கணிப்புகள் வெளியிடுவதில் சிக்கல்கள் ஏற்படுவதாக வானிலை ஆய்வாளர்கள் தெரிவிக் கின்றனர்.

**6 மாவட்டங்களில் பள்ளிகளுக்கு விடுமுறை:**

கனமழை காரணமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் ஆகிய 6 மாவட்டங்களில் பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது. திருவண்ணாமலை நீங்கலாக மற்ற 5 மாவட்டங்களில் கல்லூரிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநிலக் கல்லூரியில் இன்று நடைபெறவிருந்த தேர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இத் தேர்வு டிசம்பர் 16-ம் தேதி நடைபெறும் என கல்லூரி முதல்வர் அறிவித்துள்ளார். சென்னை பல்கலைக்கழகத்தின் இன்றைய தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மறுதேதி பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் இன்றைய தேர்வுகள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் கனேசன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி, காரைக்காலில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரம் உற்பத்தி செய்யும் மிதிவண்டி சாதனம்: ரூ.12,000 ரூ.15,000 விலையில் மார்ச் மாதம் சந்தைக்கு வருகிறது



▲ மின்சாரம் உற்பத்தி செய்யும் மிதிவண்டி சாதனம். (உள்படம்) மனோஜ் பர்கவா.

‘பெடல்’ செய்வதன் மூலம் மின் சாரம் உற்பத்தி செய்யும் நிலையான மிதிவண்டி சாதனத்தை அமெரிக்க வாழ் இந்திய தொழிலதிபரும் கொடையாளருமான மனோஜ் பர்கவா அறிமுகம் செய்துள்ளார்.

இந்த சாதனத்தை பர்கவா நேற்று டெல்லியில் அறிமுகம் செய்தார். அப்போது அவர் பேசும் போது, “இந்த மிதிவண்டி சாதனத்தில் அமர்ந்து ‘பெடல்’ செய்யும் போது, செயின் மூலம் இணைக்கப்பட்டுள்ள ஜெனரேட்டர் இயங்கி, மின்சாரம் உற்பத்தியாகிறது. இந்த மின்சாரம் ஜெனரேட்டருடன் இணைக்கப்பட்டுள்ள பேட்டரியில் சேமிக்கப்படுகிறது. ரூ.12,000 முதல் ரூ.15,000 வரையிலான இந்த மிதிவண்டி சாதனம் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் சந்தைக்கு வருகிறது” என்றார்.

“ஒரு மணி நேரம் பெடல் செய்தால் போதும், கிராமப்புற குடும்பத்தின் 24 மணி நேர மின்சாரத் தேவை பூர்த்தியாகும். இதில் விளக்குகள், சிறிய மின்விசிறி இயங்கச் செய்வதுடன் ஒரு செல்போனை சார்ஜ் செய்துகொள்ளவும் முடியும். மின்கட்டண ரசீது இல்லை. எரிபொருள் செலவு இல்லை. மேலும் சுற்றுச்சூழல் பாதிப்பும் இல்லை” என்கிறார் பர்கவா.

ஓராண்டுக்கு முன் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து இது தொடர்பாக பர்கவா பேசியுள்ளார். மேலும் பல்வேறு துறை அதிகாரிகளிடமும் சென்று உற்சாகத்துடன் விளக்கியுள்ளார். ஆனால் அவருக்கு எந்த துறை உதவி செய்யும் என்பதை முடிவு செய்வதற்கே 6 மாதங்கள் ஆனதுதான் துரதிருஷ்டம்.

இந்த மிதிவண்டி சாதனம் முதலில் உத்தராகண்ட் மாநிலத்திலும் பிறகு நாட்டின் பிற மாநிலங்களிலும் விற்பனை செய்யப்பட உள்ளது. இந்தியாவில் பல்வேறு இடங்களிலும் அமெரிக்காவிலும் இது உற்பத்தி செய்யப்பட உள்ளது.

இந்த மிதிவண்டி சாதனத்தில் ஒருவர் பெடல் செய்யும்போது அவரது உடலில் எவ்வளவு கலோரி எரிக்கப்பட்டுள்ளது என்பதை அறியும் வகையிலான ஒரு மாடலும் விற்பனைக்கு வரவுள்ளது. எனவே உடல் பருமனை குறைக்கவும் இந்த சாதனம் பேருதவியாக இருக்கும்.

“உலகம் முழுவதும் 130 கோடி மக்கள் மின்சார வசதி கிடைக்காமல் உள்ளனர். இவர்களுக்கு இந்த மிதிவண்டி சாதனம் மிகவும் உதவியாக இருக்கும்” என்கிறார் பர்கவா.

சுமார் ரூ. 27,000 கோடி சொத்துகள் கொண்ட பர்கவா, தனது தொழில் முதலீடுகளில் 99 சதவீதம், மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதாகவே இருக்க வேண்டும் என உறுதிபூண்டுள்ளார்.

இந்தியாவின் மிகப்பெரிய அறக்கட்டளைகளில் ஒன்றான தி ஹான்ஸ் புவுன்டேஷனுக்கு பர்கவா ஆதரவளித்து வருகிறார்.

**மீண்டும் பரவலாக மழை**

சிவகங்கை, :சிவகங்கை மாவட்டத்தில் ஒரு வாரத்திற்குப்பின் மீண்டும் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. அக்டோபர் மாத இறுதியில் வடகிழக்கு பருவ மழை தொடங்கியது. இம்மாத தொடக்கத்தில் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. ஆனால் கடலோர மாவட்டங்களில் அதிக மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள நிலையில் சிவகங்கை உள்ளிட்ட பல மாவட்டங்களில் போதிய மழை இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

மாவட்டம் முழுவதும் சாரல் மழை மற்றும் ஒரு சில இடங்களில் மட்டும் கன

மழை பெய்த நிலையில் கடந்த 23ம் தேதியோடு மாவட்டம் முழுவதும் மழை பெய்வது முற்றிலுமாக நின்றது. மாலை முதல் இரவு முழுவதும் பனி வீசத்தொடங்கியது. இதனால் மழை பெய்வது நின்றுவிடும் என விவசாயிகள் அச்சமடைந்தனர்.

நேற்று முன் தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக திருப்புவனத்தில் 90.8மி.மீ மழை பெய்தது. காரைக்குடியில் 68மி.மீ, மானாமதுரையில் 52மி.மீ, சிவகங்கையில் 46மி.மீ, தேவகோட்டையில் 44.2மி.மீ, இளையான்குடியில் 44மி.மீ, திருப்பத்தூரில் 40மி.மீ, பதிவாகியுள்ளது.

**கால்வாய்கள் தூர்வாரப்படாததால் கண்மாய்களுக்கு வராத மழை நீர் விவசாயிகள் கவலை**

சிவகங்கை, : சிவகங்கை மாவட்டத்தில் உள்ள நீர்வரத்து கால்வாய்கள் சரிவர தூர்வாரப்படாததால் கண்மாய்களுக்கு வரவேண்டிய மழை நீர் வராமல் போனது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். சிவகங்கை மாவட்டத்தில் பொதுப்பணித்துறை கண்மாய்கள் 716, ஒன்றிய கண்மாய்கள் 4188 மற்றும் 5ஆயிரத்திற்கும் மேற்பட்ட குளங்கள் உள்ளன. மாவட்டத்தில் 10 சதவீதம் விவசாயம் மட்டுமே ஆற்றுப்பாசனம், கிணற்றுப்பாசனத்தை நம்பி செய்யப்படுகிறது. எஞ்சிய 90 சதவீத விவசாயம் மழை நீரை நம்பி கண்மாய் பாசனம் மூலமே செய்யப்பட்டு வருகிறது. நகரங்களை தவிர அனைத்து கிராமங்களிலும் குளத்து நீரே குடிநீராக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அதிகமாக கண்மாய் மற்றும் குளங்களை கொண்ட மாவட்டங்களில் சிவகங்கை குறிப்பிடத்தக்கதாகும். 25 ஆண்டுகளுக்கு முன்வரை சரிவர பராமரிக்கப்பட்டு வந்த கண்மாய், குளங்கள் இவற்றிற்கான நீர் வரத்து கால்வாய்கள் பின்னர் போதிய பராமரிப்பின்றி போனது. கால்வாய்கள் அடைபட்டு கிடப்பது, ஆக்கிரமிப்பு உள்ளிட்டவற்றால் குறைந்த எண்ணிக்கையிலான கண்மாய், குளங்கள் தவிர எஞ்சியவை நீர்வரத்தின்றி வறண்டு கானப்பட்டது.

இந்நிலையில் ஏராளமான கண்மாய்கள் நூறுநாள் வேலை திட்டம் உள்ளிட்ட

பல்வேறு அரசு திட்டங்களின் மூலம் தூர்வாரப்பட்டது. ஆனால் நீர் வரத்து கால்வாய்கள் பல்வேறு கிராமங்களின் வழியே வருவதால் அவைகள் சரிவர தூர்வாரப்படவில்லை. இந்நிலையில் கடந்த மாதம் சிவகங்கை மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. இதில் நீர் வரத்து கால்வாய்கள் நன்றாக இருந்த கண்மாய்கள், குளங்களில் ஓரளவு நீர் தேங்கியுள்ளது. ஆனால் சுமார் 50 சதவீதம் கண்மாய்களில் போதிய நீர் வரத்தின்றி பெயரளவிற்கே நீர் உள்ளது. இந்த நீர் விவசாயத்திற்கு எவ்விதத்திலும் பயன்படாது. இதனால் கண்மாய்களை தூர்வாரியும் கால்வாய்களால் நீர் வரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் கூறியதாவது,' மாவட்டம் முழுவதும் கண்மாய்கள், குளங்களே நீர் ஆதாரமாக உள்ளது. நகரங்களை ஒட்டியுள்ள கண்மாய்களுக்கான வரத்து கால்வாய்கள் அடைபட்டோ அல்லது ஆக்கிரமிப்பு செய்தோ காணப்படுகிறது. இதனால் அவைகள் பல ஆண்டுகளாக நீர் இல்லாமல் வறண்டு போனது. ஆக்கிரமிப்பு கால்வாய்களை மீட்க வேண்டும். கண்மாய்கள் மட்டுமல்லாது அனைத்து நீர் வரத்து கால்வாய்களையும் கண்டறிந்து கோடைகாலங்களில் தூர்வார நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாததால் தற்போது மழை பெய்தும் நீர்வரத்தின்றி பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. பாரபட்சமின்றி ஆக்கிரமிப்புகளை அகற்ற அனைத்து கால்வாய்களையும் தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

**மழையால் பாதித்த பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணம்**

மயிலாடுதுறை, : மயிலாடுதுறை நீடூர் பகுதியில் போட்டி மமக மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில பொதுச் செயலாளர் தமிமுன் அன்சாரி கலந்து கொண்டார். பின்னர் அவர் அளித்த பேட்டி: மழையால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ரூ.10 லட்சம் நிவாரணம் வழங்க வேண்டும். விவசாயிகளின் கடன்களை ரத்து செய்து ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் வழங்க வேண்டும். மத்திய அரசு மேலும் ரூ.1000 கோடி வழங்க வேண்டும். இந்தியாவில் இட ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டால் உள்நாட்டுப் போர் ஏற்படும். தமிழகத்தில் இஸ்லாமியர்களுக்கான இட ஒதுக்கீட்டை 5 சதவீதமாக உயர்த்த வேண்டும். 10 ஆண்டுகளுக்குமேல் தமிழக

சிறையில் வாடும் அனைவரையும் தமிழக அரசு உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். கட்சிக்கு 2012ம் ஆண்டிலிருந்து நான்தான் பொதுச் செயலாளர். கட்சியின் பெயரை பயன்படுத்துவது குறித்து கோர்ட்டில் வழக்கு உள்ளது. 2016ம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் யாருடன் கூட்டு என்பது குறித்து ஜனவரியில் நடைபெற உள்ள தலைமை நிர்வாகக்குழு கூடி முடிவெடுக்கும் என்றார்.

**பிடிஆர்., தந்தை பெரியார், சண்முகாநதி அணை, 18ம் கால்வாய்களில் பாசனத்திற்காக தண்ணீர் திறப்பு**

உத்தமபாளையம், : தேனி மாவட்டத்தில் பி.டி.ஆர்., தந்தை பெரியார் கால்வாய்கள், சண்முகாநதி அணை, 18ம் கால்வாய் ஆகியவற்றில், பாசனத்திற்காக நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது.நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழையால், பெரியாறு அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இதையடுத்து தேனி மாவட்டத்தில் தேனி, உத்தமபாளையம் தாலுகாக்களில் உள்ள நிலங்களின் பாசன வசதிக்காக பி.டி.ஆர்., மற்றும் தந்தை பெரியார் கால்வாய்களில் கலெக்டர் வெங்கடாசலம் நேற்று தண்ணீர் திறந்து வைத்தார். இதன் மூலம் உத்தமபாளையம் தாலுகாவில் சின்னமனூர், வேப்பம்பட்டி, சீப்பாலக்கோட்டை உள்ளிட்ட கிராமங்களில் 8,309 ஏக்கர் நிலங்களும், தேனி தாலுகாவில் சீலையம்பட்டி, பூமலைக்குண்டு, தாடிச்சேரி, தப்புக்குண்டு, வெங்கடாசலபுரம், ஜங்கால்பட்டி உள்ளிட்ட ஊர்களில் 4,316 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறுகின்றன. வினாடிக்கு 100 கனஅடி தண்ணீர் வீதம் 120 நாட்களுக்கு திறக்கப்படுகிறது.

சண்முகாநதி அணை திறப்பு: சின்னமனூர் அருகே, ஹைவேவிஸ் மலைப்பகுதிகளில் பெய்த மழையால், ராயப்பன்பட்டி அருகே, 52.5 அடி உயரமுள்ள சண்முகாநதி அணை முழுக்கொள்ளளவை எட்டியது. இதையடுத்து, பாசனத்திற்காக நேற்று அணையில் தண்ணீர் திறக்கும் நிகழ்ச்சி நடந்தது. இதன் மூலம் ராயப்பன்பட்டி, மல்லிங்காபுரம், சின்னஓவுலாபுரம், எரசை, கன்னிசேர்வைபட்டி, வெள்ளையம்மாள்புரம் உள்ளிட்ட ஊர்களில் உள்ள சுமார் 1,640 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். வினாடிக்கு 14.47 கனஅடி வீதம்

தண்ணீர் திறக்கப்பட்டது. 18ம் கால்வாயில் தண்ணீர் திறப்பு: கம்பம்: நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழை காரணமாக பெரியாறு அணை, வைகை அணைகளின் நீர்மட்டம் உயர்ந்தது. இதனையடுத்து, 18ம் கால்வாயில் தண்ணீர் திறக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். தமிழக அரசின் உத்தரவின் பேரில் மாவட்ட கலெக்டர் வெங்கடாசலம் 18ம் கால்வாயில் நேற்று தண்ணீர் திறந்து வைத்தார். இதன் மூலம், உத்தமபாளையம் தாலுகாவில் 29 கண்மாய்கள் போடி தாலுகாவில் 15 கண்மாய்கள் என 44 கண்மாய்களில் தண்ணீர் தேக்கப்பட்டு, உத்தமபாளையம் தாலுகாவில் 2 ஆயிரத்து 568.90 ஏக்கர் நிலமும், போடி தாலுகாவில் 2 ஆயிரத்து 45.35 ஏக்கர் நிலம் என 4 ஆயிரத்து 614.25 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. வினாடிக்கு 279 கனஅடி தண்ணீர் வீதம் 9 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

நிகழ்ச்சியில், மஞ்சளாறு வடிநில வட்ட செயற்பொறியாளர் சேகர், உதவி செயற்பொறியாளர்கள் புச்சிபாபு, செல்வம், உதவிப் பொறியாளர்கள் சென்றாயன், லட்சுமணன், மாவட்ட ஊராட்சி தலைவர் மகாலிங்கம், நகர்மன்ற தலைவர்கள் சிவக்குமார் (கம்பம்), அருண்குமார் (கூடலூர்), ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் தங்கமுருகன், முன்னாள் எம்பி சையதுகான், 18ம் கால்வாய் சங்க தலைவர் ராமராஜ் உட்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**இருபோக சாகுபடி விளை நிலங்களில் எண்ணெய் குழாய் பதிக்க விவசாயிகள் கடும் எதிர்ப்பு 10 ஆயிரம் ஏக்கர் பாதிக்கப்படும் அபாயம்**

மதுரை, : இருபோக விளை நிலங்களில் எண்ணெய் நிறுவனத்தின் குழாய்களைப் பதிக்க விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். குழாய் பதித்தால் மதுரை மாவட்டத்தில் 10 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் பாதிக்கப்படும் என விவசாயிகள் அச்சமடைந்துள்ளனர்.இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் சார்பில் சென்னை எண்ணூரில் இருந்து செங்கல்பட்டு, பாண்டிச்சேரி, திருச்சி வாழவந்தான், இளையான்குடி வழியாக மதுரை மாவட்டம் வடிப்பட்டிக்கு பெட்ரோல், காஸ் ஆகியவற்றை நிலத்தின் அடியில் குழாய் பதித்து கொண்டு வரப்பட உள்ளது. பைப்பானது விவசாய நிலத்தின்

அடியில் பதித்து கொண்டு செல்லப்படுகிறது. இதனால் பல ஆயிரக்கணக்கான விளை நிலங்கள் வாங்க எண்ணெய் நிறுவனம் முடிவு செய்துள்ளது. இதற்கான பணியை கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் தொடங்கியது. மதுரை மாவட்டத்தில் மட்டும் இந்த பணிக்காக 10 ஆயிரம் ஏக்கரைக் கையகப்படுத்த எண்ணெய் நிறுவனம் முடிவு செய்துள்ளது. இதற்காக குழாய் பதிக்கும் பகுதியைத் தேர்வு செய்து அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு ஏற்கெனவே 2014 நவ.10ம் தேதி நோட்டீஸ் அனுப்பியது. இதற்கு மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததால், அந்தப் பணியை எண்ணெய் நிறுவன அதிகாரிகள் கிடப்பில் போட்டனர். தற்போது மீண்டும் பணியை அதிகாரிகள் தொடங்கியுள்ளனர்.

இதற்காக வாடிப்பட்டி, ஆண்டிபட்டி, தனிச்சியம், அலங்காநல்லூர், குமாரம், குலமங்கலம், வடுகபட்டி, வீரபாண்டி, திருப்பாலை, கடச்சனேந்தல், ஒத்தக்கடை, திருவாதவூர் உள்ளிட்ட பல ஊர்களில் உள்ள விவசாயிகளுக்கு எண்ணெய் நிறுவன அங்கீகாரம் பெற்ற சப்-கலெக்டர் மதுசூதனன் நோட்டீஸ் அனுப்பியுள்ளார். அதில் ஏற்கெனவே திட்டமிட்டப்படி நிலம் கையகப்படுத்த ஆட்சேபம் இருந்தால் 1ம் தேதி கருத்துத் தெரிவிக்கலாம் எனக் கூறி நோட்டீஸ் அனுப்பியுள்ளனர். இதற்கு விவசாயிகள் மத்தியில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

நிலம் கையகப்படுத்துவது தொடர்பாக மாவட்ட நிர்வாகத்திற்குக்கூட தெரிவிக்காமல் மறைமுகமாக எண்ணெய் நிறுவனம் செயல்படுவதாகவும், மேலும் ஒரு போக, இரு போக சாகுபடிப் பகுதியில் நல்ல விளைச்சல் தரக்கூடிய பகுதியை அதிகாரிகள் திட்டமிட்டு தேர்வு செய்துள்ளனர். இதனால் 10 ஆயிரம் ஏக்கர் நிலம் பாதிப்பு அடையும் என விவசாயிகள் அச்சமடைந்துள்ளனர். இதுகுறித்து பெரியாறு பாசன விவசாயி குலமங்கலத்தைச் சேர்ந்த திருப்பதி கூறுகையில், “எண்ணெய் நிறுவனம் தேர்வு செய்துள்ள பகுதியானது முற்றிலும் பெரியாறு கால்வாய் பாசனப் பகுதி ஆகும். இதில் குழாய் பதிப்பதால், சிறு, குறு விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள்.

அவர்கள் நிலத்தையும் வருமானத்தையும் இழக்க நேரிடும். குழாய் பதிக்கப்பட்டால் அந்தப் பகுதியில் பாசனம் எதுவும் செய்ய முடியாது. இதுபற்றி மாவட்ட நிர்வாகத்திடம் கேட்டால் எங்களுக்கு எந்தத் தகவலும் வரவில்லை எனக் கூறுகின்றனர். மாவட்டத்தில் தரிசுப் பகுதி எவ்வளவோ உள்ளது. ஏற்கெனவே கப்பலூரில் ஒரு யூனிட் உள்ளது. அப்படி இருக்க மேலும் ஒரு யூனிட் தேவையில்லாதது. விவசாயிகள் வயிற்றில் அடிப்பதை எண்ணெய் நிறுவனம் நிறுத்த வேண்டும்," என்றார். எண்ணெய் நிறுவனத்தின் பணிக்கு விவசாயிகள் மத்தியில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.